Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 043 | வெள்ளிக்கிழமை | மார்கழி 23 ஆம் நாள் 08 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## பிணை கோரி அரசியல் கைதி உணவு ஒறுப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 8

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதியான கனகசபை தேவதாசன் (வயது 64), பிணை அனுமதி பெற ஏற்பாடுசெய்யுமாறு கோரி நேற்றுமுன்தினம் தொடக்கம் உணவுஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

தனது மேன்முறையீட்டு வழக்குகள் 19

## 'உதயன்' பத்திரிகை மீது வழக்கு கட்டளையைக் கையளித்தது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜன.8

"உதயன்" பத்திரிகைக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அழைப்புக் கட்டளை நேற்று பொலிஸாரால் "உதயன்" பத்திரிகை அலுவலகத்தில் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாக எதிர்வரும் 19ஆம் திகதி நீதிமன்றத்துக்கு சமூகமளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் 19

## புலிகளின் கிளைமோர் மீட்பு

வட்டுக்கோட்டை, ஜன.8

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுழிபுரம் மத்தியிலுள்ள காணியிலிருந்து, தமிழீழ விடுதலைப் புலிக 19

# ஓரணியாக நின்றாலே தீர்வைப் பெற முடியும்

## அனைத்துத் தமிழ்த் தரப்புக்கும் ஜெய்சங்கர் அறிவுரை

கொழும்பு, ஜனவரி 8

இலங்கைத் தமிழர்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கத்துடன் நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக இருக்கின்றது. தமிழ் மக்களை ஒருபோதும் இந்தியா கைவிடாது. புதிய அரமைப்பு உருவாகும் சமயத்தில் அனைத்துத் தமிழ்த் தரப்பும் ஓரணியில் நிற்க வேண்டும். அப்போதுதான் தீர்வை வென்றெடுக்க முடியும்.

இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். 19

## வடக்கு - கிழக்கு தனிப்பிராந்தியம்

### கூட்டமைப்பின் யோசனை ஜெய்சங்கரிடம் கையளிப்பு

கொழும்பு, ஜன.8

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர் குழுவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்துள்ள யோசனைத் திட்ட வரைபு. இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. 19



## மாகாண சபைகளில் கைவைக்கக் கூடாது

### இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை அரசுக்கு "குட்டு"

கொழும்பு, ஜன.8

மாகாண சபை முறைமையில் மாற்றம் செய்யக் கூடாது என்றும், விரைவில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் இந்திய 19

## வடக்கில் 12 பேருக்கு நேற்று தொற்று உறுதி

யாழ்ப்பாணம், ஜன.8

வடக்கில் நேற்று 12 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவ 19

## யாழ்ப்பாண மருத்துவபீட மாணவனுக்கும் தொற்று!

யாழ்ப்பாணம், ஜன.8

யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மாணவன் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கஞ்சேரி நல்லூர் வீதியில் வீடொன்றில் தங்கியிருந்து கற்கும் மாணவர் ஒருவருக்கே தொற்று உறுதி 19

## இந்தியாவின் மீது முழு நம்பிக்கை!

### கூட்டமைப்பின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.8

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத்தரும் நடவடிக்கையில் இந்தியாவை நாம் முழுமையாக நம்புகின்றோம்.

தமிழர்களுக்கான தீர்வு விடயம் 19



## அமெரிக்காவில் களேபரம் ட்ரம்ப் பதவிக்கு ஆபத்து!

வொஷிங்டன், ஜன.8

அமெரிக்க காங்கிரஸ் கட்டடத்துக்குள் ட்ரம்ப் ஆதரவாளர்கள் வன்முறையில் இறங்கியதை அடுத்து ட்ரம்புக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ளன. ஜனநாயகத்துக்கு விரோதமாகச் செயற்பட்டார், கலகத்தை ஏற்படுத்தி 20

## உயிரிழந்த யாசகரிடம் ஒரு லட்சம் ரூபா பணம்

கிளிநொச்சி, ஜன.8

உயிரிழந்த யாசகர் ஒருவரின் உடமையில் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பணம் மீட்கப்பட்ட சம்பவம் கிளிநொச்சி மாவட்ட மருத் 19

## இந்தியாவின் ஆசைப்படி தேர்தல் நடத்த முடியாது!

### மஹிந்த அணி எம்.பி. எகிறுகிறார்

கொழும்பு, ஜன.8

இந்தியாவின் அவசரத்துக்காக மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த முடியாது என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் கோப் குழுவின் தலைவரு 20

## இந்திய மீனவர் மூவர் கே.கே.எஸ்ஸில் கைது

யாழ்ப்பாணம், ஜன.8

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் மூவர் இலங்கைக் 19

# அன்டிஜென் வேண்டாம் பி.சி.ஆர். போதுமானது

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 8

**வடக்கு மாகாணத்தில் தற்போதைய நிலையில் அன்டிஜன் பரிசோதனை தேவையில்லை. பி.சி.ஆர். பரிசோதனைகள் மட்டும் போதுமானவை என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை என்பவற்றில் நாளாந்தம் 600 க்கும் மேற்பட்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளக்கூடியதாகவுள்ளது. எனவே தற்போதைய நிலையில் அன்டி.ஜென் பரிசோதனை தேவையில்லை என்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற யாழ். மாவட்டச் கொரோனாத் தடுப்பு விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவித்தார்.

ஏனைய மாகாணங்களில் குறித்த அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. காரணம், வடக்கு மாகாணத்தைப்போல அந்த மாகாணங்களில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது.

தவிர, அன்டி.ஜென் பரிசோதனையில் சில நம்பிக்கையில்லாத் தன்மையும் காணப்படுகின்றது. அன்டிஜன் பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று என காண்பிக்குமாயின் அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்யும்போது தொற்று இல்லை என்று காண்பிக்கும்.

அதேபோல் அன்டிஜென் சோதனையின்போது ஒருவருக்குத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தினால் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தும்போது தொற்று உறுதிப்படுத்தப்படும்.

எனவே அன்டி.ஜென் பரிசோதனை மிகவும் நம்பகரமான சோதனை முறை அல்ல என்று தெரிவித்தார்.

இதுதவிர, வெளிமாவட்டங்களிலிருந்து ஆனையிறவு மற்றும் பூநகரிப் பாதை ஊடாக வருவோருக்கு நாம் அதிகாலை வேளைகளில் பி.சி.ஆர். சோதனைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம் என்று மேலும் தெரிவித்தார். (த20)



'ஜடாயு' தன்னார்வ அமைப்பின் மரநடுகைச் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத்தலைவருமான ஈ.சரவணபவனிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் ஜடாயு அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (ரி4)

## பணிக்குத் திரும்பினர் தொழிலாளர்கள்

சாவகச்சேரி, ஜன. 8

சாவகச்சேரி நகர சபையில் ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்கள் ஒரு வாரமாக மேற்கொண்டு வந்த பணிப்புறக்கணிப்பு நேற்று முடிவுக்கு வந்தது. இவர்கள் இன்று பணியில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த வேதனத்தை அதிகரித்து வழங்க வேண்டுமென்று கோரி கடந்த முதலாம் திகதி தொடக்கம் தொழிலாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தனர். இதனால் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குப்பைகள் நிறைந்து விட்டன.

**இந்த விடயம் தொடர்பாக** சபையின் செயலாளர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் ஒப்பந்தப் பணியாளர்களை வேலைக்கு அமர்த்திய ஒப்பந்ததாரரை அலுவலகத்துக்கு வரவழைத்து பேச்சு நடத்தினர்.

இந்தப் பணியாளர்களுக்கு ஏற்கனவே நாளொன்றுக்கு வழங்கி வந்த 750 ரூபாவை சபையால் வழங்கப்படும், தொகையில், ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றுக்கு கழித்து நாளொன்றுக்கு ரூபா 850 வீதம் அதிகரித்து வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட தொழிலாளர்கள் பணிப்புறக்கணிப்பை கைவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த9)

## அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு பொங்கல் வரை தினமும் பிரார்த்தனை

மன்னார், ஜன. 8

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி பிரார்த்தனை வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் அங்கு நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் மன்னார் இணைப்பாளர் யாட்சன் பிகிறாடோ மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாத் தொற்று அதிகமாகிவரும் இந்த நேரத்தில் அரசியல் கைதிகளை பாதுகாக்கும் நோக்கில் நீண்ட காலமாக சிறைகளில் விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் பொங்கல் பண்டிகைக்கு முன்பாக விடுதலை செய்யுங்கள்.

தைப்பொங்கலை அவர்களின் உறவினர்களுடன் கொண்டாட வேண்டும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை அரசியல் கைதிகளின் விடுதலைக்கான பிரார்த்தனை வாரம் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

ஊடக சந்திப்பில் சர்வ மதத் தலைவர்கள் மற்றும் மதத்தலைவர்கள், பாதிக்கப்பட்ட அரசியல் கைதிகளின் உறவினர்கள், சட்டத்தரணி அ.அர்ஜீன் மற்றும் மன்னார் சமூக கொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த213,56)

## பொதுக்கூட்டம் வேண்டாமென செம்பியன்பற்றில் கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம், ஜன. 8

இன்று நடைபெறும் பொதுக் கூட்டத்தைத் தடுத்து நிறுத்துமாறு கோரி வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

செம்பியன்பற்று வடக்கு கிராம அலுவலர் பிரிவிலிருந்து தனிப்பனை எனும் கிராமத்தை உருவாக்கி அதில் தனியான கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றை உருவாக்குவதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கைகள் மேற்கொள்கிறது. இது பற்றிய பொதுக் கூட்டம் இன்று நடைபெற ஏற்பாடாகியிருந்த நிலையிலேயே போராட்டம் நடத்தப்பட்டது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக கவனவீர்ப்பு நடைபெற்றது. இறுதியில் பிரதேச செயலருக்கு என பிரதேச மக்கள் மனுவும் கையளித்தனர்.

தமக்குத் தொடர்ந்தும் அநீதி இடம் பெறுவதாலேயே தனியான கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றை உருவாக்கும் நடவடிக்கைகளை சட்ட ரீதியாக மேற்கொண்டோம் என்று செம்பியன் பற்று வடக்கின் தனிப்பனை கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.

## சகல இன மக்களதும் கோரிக்கைகள் அவசியம்

**அரசமைப்பு பற்றி அமைச்சர் கருத்து**

கொழும்பு, ஜன. 8

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் அனைத்து இன மக்களின் கோரிக்கைகளும் உள்வாங்கப்படுகின்றமை அவசியம். ஒரு தரப்பினரது கோரிக்கை தேசிய பாதுகாப்புக்கும், பிற இனத்தவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அமைய வேண்டும் என்பதில் அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்டத்தின் பல விடயங்களை அரசு தற்போது செயற்படுத்துகிறது. கொவிட் 19 வைரஸ் தாக்கத்தின் மத்தியில் மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் தடையில்லாமல் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது நிறைவுறும் தருவாயில் உள்ள அபிவிருத்தி நிர்மாண பணிகளை மே மாதத்துக்குள் முழுமைப்படுத்த புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசு முன்னெடுத்த அபிவிருத்தி நிர்மாண பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க ஜனாதிபதி அனைத்து அமைச்சுக்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரசு மாறும்போது மக்களுக்காக முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளைத் தடை செய்வது பொருத்தமற்ற செயற்பாடாகும்.

மாகாண சபை முறைமை நாட்டுக்கு அவசியம் . மாகாண சபைத் தேர்தல் உரிய காலத்தில் இடம்பெற்றிருந்தால் தற்போது தேர்தல் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் அரசியல் மற்றும் சமூகமட்டத்தில் தோற்றம் பெற்றிருக்காது.

மாகாண சபை தேர்தல் எம்முறையில் நடத்த வேண்டும் என்பது குறித்து சிக்கல் நிலை காணப்படுகிறது. ஆகவே மாகாண சபை குறித்த சிறந்த தீர்மானம் விரைவில் அறிவிக்கப்படும். என்றார். (தஇ)

# ஜனாஸாக்கள் எரிப்புத்தான்!

## சுகாதார அமைச்சர் சபையில் நேற்றும் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன. 8**
**கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம்செய்ய எந்த சூழ்நிலையிலும் அனுமதிக்க முடியாது என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.**



நாடாளுமன்றத்தில் நேற்றுப் பேசிய அமைச்சர், இந்த விடயத்தை ஆராயும் நிபுணர் குழு கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்ய மட்டுமே பரிந்துரைத்துள்ளது. எனவே சமூக, மத, அரசியல் அல்லது தனிப்பட்ட காரணங்களால் இந்த முடிவை அரசு மாற்றிக் கொள்ளாது. நிபுணர் குழுவின் பரிந்துரைகள் தெளிவானவை என்று அமைச்சர் கூறியதுடன், முடிவில் திருத்தம் செய்ய முடியாது என்றும் கூறினார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஒ.இ)

# 10 பேர் கொண்ட குழு வீடு புகுந்து அடாவடி

## உடுவிலில் இரவு சம்பவம்

உடுவிலில் இரவு வீடு புகுந்த வன்முறைக் கும்பல், அங்கிருந்த உடமைகளை அடித்துச் சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
உடுவில் அம்பலவாணர் வீதியில் நேற்றிரவு சுமார் 9.30 அளவில் இது இடம்பெற்றது. வீட்டில் வயோதிபப் பெண்ணும் அவருடைய மகனும் வசிக்கின்றனர்.
5 மோட்டார் சைக்கிள்களில் முகத்தை மூடிக் கட்டியவாறு வந்த 10 பேர் கொண்ட குழுவினரே வீட்டுக்குள் புகுந்து இலத்திரனியல் சாதனங்கள் உள்ளிட்ட உடமைகளைத் தாக்கிச் சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. எனினும், சம்பவம் இடம்பெற்று சுமார் ஒரு மணிநேரமாக பொலிஸார் அங்கு வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (தஇ)

# ஒன்றாக விடயங்களை கையாளவேண்டும்

## விந்தன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 8
தமிழ்த் தலைவர்கள் ஆளுக்கொரு அறிக்கை விடாமல், ஐ.நா. விவகாரத்தில் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் க.விந்தன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ்த் தலைவர்கள் ஐ.நாவை ஒரே குரலில் அணுக வேண்டும். அதற்கான சந்தர்ப்பம் இது. தமிழ் மக்களின் விடயங்களை தனித்தனியாக கையாளாமல் ஒருமித்து கையாளவேண்டும்.
நாம் பிரிந்து நின்று கோரிக்கைகளை முன்வைப்பது தமிழர் தரப்பை மலினப்படுத்தும். இதனைக் கருத்திலெடுத்து தமிழர் தரப்பு ஓரணியாக ஐ.நாவை அணுகவேண்டும் - என்றார். (ஒ.20)

# விடுமுறை காலத்தில் வகுப்பு நடத்திய பாடசாலை தனிமைப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 8
பாடசாலை விடுமுறை காலத்தில், கொரோனா சூழலில் மாணவர்களை அழைத்து வகுப்புநடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்து வடமராட்சி கரவெட்டிப் பகுதியில் பாடசாலை ஒன்று தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.
பாடசாலையின் அதிபரும், வகுப்பு நடத்திய ஆசிரியரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. (ஒ.26)



# விவசாயத்திலும் கால் பதிக்கின்றது ராணுவம்

கொழும்பு, ஜன. 8
இலங்கை இராணுவம் விவசாய மற்றும் கால்நடை படைப் பிரிவை புதிதாக நிறுவியுள்ளது. நேற்றுக் காலை இராணுவத் தலைமையகத்தில் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் தலைமையில் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.
நாட்டில் எந்தவொரு விவசாயப் பொருள் பற்றாக்குறையும் இல்லாமல் நாட்டுக்குள் பயிர்களை உற்பத்தி செய்வதே இதன் நோக்கம் என்று இராணுவத் தளபதி தெரிவித்தார். சிவில் துறைகள் அனைத்தும் இராணுவமயமாகி வருகின்றன என குற்றம் சுமத்தப்பட்டும் வரும் நிலையில் புதிய படைப் பிரிவை இராணுவம் நிறுவியுள்ளது. (ஒ.இ)

# மத்தியஸ்தர் சபை அமர்வுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.8
யாழ்ப்பாணம் ஜே/ 246 பிரிவு மத்தியஸ்தர் சபை அமர்வுகள் நாளை ஒன்பதாம் திகதி சனிக்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளன என்று சபையின் தவிசாளர் மேர்சி சுஜந்தினி தெரிவித்தார்.
கொரோனாத் தொற்றுக் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த இந்த அமர்வுகள் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையத்தில் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் அனுமதியின் பிரகாரம் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெறவுள்ளன.
மத்தியஸ்தர் சபை அமர்வுகளுக்கு வருகை தருவோர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

# சாராயம் என்று ரின்னர் குடித்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 8
நாவற்குழி 300 வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் கணபதிப்பிள்ளை ஜனாதீபன் (வயது 36) என்பவர் மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டு அங்கு உயிரிழந்துள் ளார்.
இவர் மதுப்பழக்கத்துக்கு அடிமையானவர் என்று உறவினர்கள், விசாரணையின்போது தெரிவித்துள்ளனர். நேற்றுக் காலை 9 மணிக்கு வீட்டுக்கு வந்தவர், சாராயப் போத்தலை எடுத்துக் குடித்துள்ளார். அதில் ரின்னர் இருந்தது தெரியாமல் அவர் குடித்துள்ளார் என உறவினர்கள் விசாரணையின் போது கூறியுள்ளனர். அவரது வீட்டில் வர்ணப்பூச்சு வேலை இடம்பெறுகின்றது. ரின்னரை, சாராயப் போத்தலினுள் விட்டு வைத்துள்ளனர்.
அதனையே அவர் எடுத்துக் குடித்துள்ளார் என விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவர் சாராயம் என்று நினைத்து ரின்னரைக் குடித்து விட்டு படுத்துள்ளார். நீண்ட நேரமாக எழும்பவில்லை.
மயக்கமடைந்த நிலையில் அவரை மருத்துவமனைக்கு உறவினர்கள் கொண்டு சென்றனர். அங்கு அவர் உயிரிழந்தார்.
இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (ஒ.26)

# சுகாதார நடைமுறைகளை செயற்படுத்துவதில் தடை

### அரசியல் அழுத்தம் என்று காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி சுட்டிக்காட்டு

காரைநகர், ஜன.8
சுகாதார அமைச்சால் விடுக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைச் செயற்படுத்தும்போது சில உயர்மட்ட அரசியல் அழுத்தங்கள் காரணமாகத் தமக்கு இடர்பாடுகள் காணப்படுகின்றன என்று காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி யதுநந்தன் குற்றஞ்சாட்டினார்.
யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கொரோனாத் தடுப்பு விசேட செயலணிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட ஆலயங்களில் சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களுக்கமைய 50 பேர் மட்டுமே ஆலய உற்சவங்களில் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
எனவே அதனை நாம் செயற்படுத்துகின்றோம் அவ்வாறு செயற்படுத்தும் போது ஒரு சில நபர்கள் தமது உயர்மட்ட அரசியல் அழுத்தங்களைப் பாவிக்கின்றனர். அதனால் எமக்கு இடையூறு ஏற்படுகிறது. இது தொடர்பில் ஏற்கனவே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.
அத்தோடு தொடர்ச்சியாக அநாமதேய தொலைபேசிகள் ஊடாக மிரட்டல்கள் இடம்பெறுகின்றன.
இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்றார். (ப)

# பஸ் வசதியின்றி சிரமப்படும் அக்கராயன் கிழக்கு மக்கள்

*விரைவில் தீர்வை வழங்குமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை*

**கிளிநொச்சி, ஜன.8**
**போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வரும் கிளிநொச்சி அக்கராயன் கிழக்கு பகுதி மக்களுக்கு விரைவில் தீர்வு வழங்கி உதவுமாறு இப் பகுதி பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.**

கிளிநொச்சி நகரத்தில் இருந்து ஸ்கந்தபுரம் ஊடாக அக்கராயன், முழங்காவில்வரை பஸ் சேவைகள் நடைபெறுகின்றன. கரித்தாஸ் குடியிருப்பு, யூனியன்குளம் மற்றும் அக்கராயன் கிழக்கு பகுதிகளுக்கு பஸ் சேவைகள் நடைபெறுவதில்லை. காலையில் வன்னேரிக்குளத்தில் இருந்து பயணத்தைத் தொடங்கும் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் ஒன்று அக்கராயன், ஸ்கந்தபுரம், அக்கராயன் அணைக்கட்டு வீதி வழியாக பயணித்து அக்கராயன் கிழக்கு, யூனியன்குளம், கோணாவில் வழியாக கிளிநொச்சி நகரத்தை சென்றடையும். ஆனால் குறித்த பஸ் மீண்டும் அதே வழித்தடத்தால் பயணிக்காமல் கிளிநொச்சி நகரத்தில் இருந்து ஸ்கந்தபுரம் ஊடாக வன்னேரிக்குளத்தைச் சென்றடையும்.
இதனால் அக்கராயன் கிழக்கு, யூனியன்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரம் வரையான குடும்பங்கள், கடந்த பத்தாண்டுகளாக போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். அக்கராயன் மகா வித்தியா லயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் என்பவற்றுக்கு மாணவர்கள் நடந்தே செல்ல வேண்டி உள்ளது. மேலதிக வகுப்புகளுக்கு கிளிநொச்சி நகரத்துக்குச் செல்ல வேண்டிய மாணவர்கள் 2 கிலோமீற்றருக்கு அதிகமான தூரம் நடந்து சென்றே பஸ்களில் பயணிக்க வேண்டியுள்ளது. அக்கராயன் கிழக்கு, யூனியன்குளம் வழியாக கோணாவில் வரை வீதி நிரந்த ரமாகப் புனரமைக்கப்பட்டும் பஸ் சேவைகள் இடம் பெறுவதில்லை. இந் நிலையில் போக்குவரத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் அக்கராயன் கிழக்கு மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்ப்ப தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுக்கின்றன. (ந-ரி2)



## இரு பயனாளிகளுக்கு வீடுகள் கையளிப்பு

கிளிநொச்சி.ஜன.8
கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் ஊடாக வழங்கப்பட்ட இரு வீடுகள் பயனாளிகளிடம் கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டன. வட்டக்கச்சி சிவிக் சென்றர் மற்றும் மாயவனூர் பகுதிகளிலேயே இந்த வீடுகள் கையளிக்கப்பட்டன.
வீடுகளைக் கையளித்த மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைப்பாளர் வை.தவநாதன் மற்றும் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன் ஆகியோர் வீடுகளுக்கான மின்சார இணைப்பு மற்றும் பயனாளிகளின் இதர தேவைகளை நிறைவேற்றுவது தொடர்பாகவும் அவர்களுடன் கலந்துரையாடினர். (ஐ-ரி2)

## மன். வங்காலை வீதி சீரின்மை

*பொதுமக்கள் அசௌகரியம்*

மன்னார், ஜன.8
மன்னார், வங்காலை கிராமத்திலுள்ள குணசிங்க உள்ளக வீதி பல வருடங்களாக எந்தவித அபிவிருத்தியும் செய்யப்படாது காணப்படுகிறது. மழை காலங்களில் குண்டும் குழியுமாக காணப்படும் இந்த வீதியால் பலரும் அவசர பயணங்களை மேற்கொள்ள முடியாது அவதியுறுகின்றனர். இந்த வீதி தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் அவர்களால் இன்னமும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (ச-213)





## மாஸ்க் அணியாதோர் பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு!

சாவகச்சேரி, ஜன.8
கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டங்கள் இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் முகக்கவசம் முறையாக அணியாமல் நடமாடியவர்கள் பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டனர். இவர்களுக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-9)

## மக்கள் கோரிக்கைக்கு அமைய இடம்மாறவுள்ளது இந்து மயானம்!

வலி.தென்மேற்கு, ஜன.8
கல்லுண்டாய் குடியேற்றத் திட்டத்துக்கு அருகாமையிலுள்ள இந்து மயானம், மக்களின் கோரிக்கைக்கு அமைய கடற்கரைப் பக்கமாக பின்னோக்கி நகர்த்தப்படவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை தவிசாளர் அ.ஜெபநேசன் மேற்கொண்டுள்ளார்.
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் கல்லுண்டாய்ப் பகுதியில் கடந்த ஆண்டு 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியமர்த்தப்பட் டன.
இந்தக் குடியேற்றத் திட்டத்துக்கு அருகாமையில் மூன்று மயானங்கள் உள்ளன. இந்த மயானங்களில் சடலங்களை எரியூட்டுவதால் அங்கு வசிக்கும் மக்கள் சுகாதாரச் சீர்கேடுகளுக்கு உள்ளாவதுடன் வேறு பல பிரச்சினைகளுக்கும் முகம்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
இந்த நிலை குறித்து அந்தப் பகுதி மக்கள் தவிசாளரின் கவனத்துக்கு கொண்டுவந்ததைத் தொடர்ந்து. மயானத்தை கடற்கரைப் பக்கமாக பின்நோக்கி நகர்த்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள தவிசாளர் இதற்கான காணியைப் பெறுவதற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயருடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளார். (ற-115)

## சாவகச்சேரியில் கஞ்சாவுடன் கைதானவர் விளக்கமறியலில்

கொடிகாமம், ஜன 8
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாவகச்சேரி நகர்ப் பகுதியில் ஒன்றரைக் கிலோ கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட ஒருவர் நேற்றுமுன்தினம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
இவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது 14 நாள்கள் மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-159)

## கடலுணவுகளை வளர்ப்பதில் கடற்றொழிலாளர்கள் ஆர்வம்

பூநகரி, ஜன.8
கடல்பண்ணையில் கடலுணவுகளை வளர்ப்பதில் பூநகரி பிரதேச கடற்றொழிலாளர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டுவருகின்றனர். இரணைதீவு, நாச்சிக்குடா, குமுழமுனை, கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, தெளிகரை, பள்ளிக்குடா, கௌதாரிமுனை, கறுக்காய்த்தீவு போன்ற பகுதிகளில் உள்ள கடற்றொழிலாளர்களே இதில் அதிகம் ஈடுபடுகின்றனர்.
கடல் பண்ணைகளில் நண்டு, இறால், கடலட்டை, பாலமீன், கொடுவாய்மீன், மற்றும் கடற்பாசி என்பவை வளர்க்கப்பட்டு கடலுணவுகளாக சந்தைப்படுத்தப்படுகின்றன. கடலுணவு ஏற்றுமதியல் இவற்றுக்கு நல்ல வரவேற்புள்ள நிலையில் இந்த முறையிலான கடலுணவு வளர்ப்பில் தொழிலாளர்கள் மிகுந்த ஆர்வம் காட்டிவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-ரி1)



கொடிகாமம் தெற்கு ஜே/328 கிராம அலுவலகர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 20 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. கொடிகாமம் வர்த்தக சங்கத்தால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஜ-159)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய தருணமிது!

எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஜெனிவா மனித உரிமை சபையின் அமர்வில் இலங்கை தொடர்பான விவகாரம் முக்கியத்துவம்மிக்க ஒன்றாக விவாதிக்கப்பட உள்ளது. இந்த விவகாரத்தை தமிழர் தரப்பு எவ்வாறு ஆக்கபூர்வமாகக் கையாளப்போகிறது என்ற கேள்விக்கான பதிலைத் தேடும் வகையிலான ஓரளவுக்கேனும் நம்பிக்கை தரும் நகர்வு ஒன்றைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருங்கிணைந்து மேற்கொள்ளத் துணிந்திருப்பது இன்றைய சூழலில் ஒரு நல்ல செய்தியே! இப்படியானதோர் முடிவுக்கு மூன்று பிரதான தமிழ்க்கட்சிகளும் வந்திருப்பது ஒரு காலத் தேவை எனில் மிகையில்லை.

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி குரல்கொடுத்தும், போராடியும் தத்தம் தனித்துவ அரசியல் கோட்பாடுகளின் அடிப்படையில் கருத்தியல் ரீதியில் இதுவரை காலமும் முரண்பட்டு வந்த தலைமைகள் நெருக்கடிமிக்க இந்தத் தருணத்திலாவது தமது பொறுப்புணர்ந்து செயற்பட முடிவெடுத்திருப்பது மகிழ்ச்சியே!

ஆனாலும் அடுத்துவரும் சில வாரங்களில் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஏராளம். கட்சி மற்றும் தனிப்பட்ட கொள்கைசார் அரசியல் அபிலாஷைகளுக்கு அப்பால், தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் மற்றும் வாழ்வுரிமைக்கான விருப்புகள் என்பவற்றை முன்னிறுத்தல், தேசிய மற்றும் சர்வதேச ரீதியான இலங்கை தொடர்பான விவகாரக் கையாளுகையை உன்னிப்பாகக் கவனித்தல், ஜெனிவா அமர்வை தீர்க்கமாகவும் ஒருங்கிணைந்த பலத்துடனும் எதிர்கொள்ள முடிவெடுத்தல் என்பனவே தமிழ் மக்களின் குரலை ஜெனிவாவில் ஒலிக்கச் செய்வதற்கு ஏதுவாக அமையும்.

இதேவேளை ஜெனிவா அமர்வை எவ்வாறு எதிர்கொள்வது அல்லது தமக்கு எதிராக முன்வைக்கக் கூடிய பிரேரணைகளை முறியடித்துச் சமாளிப்பது என்பது தொடர்பாக இலங்கை அரசும் தனது ஆதரவு சக்திகளுடன் இணைந்து தீவிரமாக ஆலோசித்து வருகின்றது. இதனையே அரச தரப்பின் அறிக்கைகளும் வீராவேசப் பேச்சுக்களும் வெளிப்படுத்தி நிற்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். இவற்றை வெறுமனே மிரட்டும் தொனியிலான அரசியல் அறிவிப்புக்களாக எவரும் கருதிவிடக்கூடாது. இதன் பின்னாலுள்ள சர்வதேச மேலாதிக்க சக்திகளின் இந்து சமுத்திரப் பிராந்தியம் மீதான ஆதிக்க அரசியலையும் கருத்தூன்றிக் கவனத்தில் கொள்வது அவசியம்.


இலங்கையரசின் சர்வதேச ராஜதந்திர ரீதியிலான அரசியல் கொள்கைகள் எமது மக்கள் தொடர்பான விவகாரங்களில் கடந்த காலங்களில் ஐ.நா.சபை உட்பட எல்லா நாடுகளையும் எவ்வாறான தீர்மானங்களை எடுக்க வைத்தது என்பதைப் பட்டறிவுப் பாடமாகக் கருத்தில் கொள்ள வேண்டும். தவறின் நாம் மீண்டும் ஏமாந்த சோணகிரிகளாக எம்மை இனம் காட்டிக்கொள்ள வேண்டிய அவலமும் ஏற்படலாம்.

ஜெனிவாப் பிரச்சினை தொடர்பாகத் தமிழ்த் தேசியத் தலைமைகள் ஒருமித்துச் செயற்படும் ஒரு சூழல் உருவாகியுள்ள ஆரோக்கியமான நிலையில், இந்திய வெளியுறவு அமைச்சரின் அவசர வருகையும் நிகழ்ந்துள்ளது. வந்ததும் வராததுமாக அரச தரப்பு மட்டுமல்லாது கூட்டமைப்பினருடனான வேக வேகமான அவரின் இரகசியப் பேச்சு வார்த்தைகளும் அதனைத் தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கைகளும் கூட எத்தகைய அரசியல் உள்நோக்கங்களை கொண்டவை என்பது புரியாத விடயமே.

இந்திய அமைச்சரின் அறிக்கை நம்பிக்கையூட்டும் தொனியைக் கொண்டிருப்பதாக எண்ணத் தோன்றினாலும் போர் முடிவுக்கு வந்த பின்னரான காலப்பகுதியில் இவ்வாறான பல அறிக்கைகளை இந்தியா விட்டதும், பிறகு அவற்றைக் கைவிட்டதும், தமிழ்த் தலைமைகளுக்கு வாக்குறுதி வழங்கிய பின் அவற்றைத் தேர்தல் கால வாக்காளர்களுக்கு வழங்கும் வாக்குறுதிகளைப் போல மறந்து போனதும்(?) வரலாற்றுப் பாடங்களே!

புதிய அரசியல்யாப்பு உருவாக்கம், இந்தியாவின் புதிய வாக்குறுதி என்பவற்றின் அடிப்படையான அரசியல் விவகாரம் ஒரு புறம் இருக்க, ஜெனிவா விவகாரத்தில் தமிழ்த் தலைமைகள் சுயமாகச் சிந்தித்து மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நீதி கோரும் செயற்பாடுகளில் அந்நியத் தலையீடுகளை, ஆலோசனைகளைப் பின்பற்ற நேரின் அது மிக ஆபத்தான சூழலையே உருவாக்கும்!

இன்றைய கேலிச்சித்திரம்



நன்றி - நாமல் அமரசிங்க

# பொதுப் போக்குவரத்துக்களை மாணவர்கள் தவிர்க்கவேண்டும்

## வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.8

எதிர்வரும் திங்கட்கிழமை வடக்கு மாகாணத்தில் பாடசாலைகள் ஆரம்பிக்கும் நிலையில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பொதுப் போக்குவரத்துக்களைத் தவிர்த்து தமது பெற்றோரின் சொந்த வாகனங்களில் பாடசாலைக்குச் செல்வது சிறந்தது என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலைகளை ஆரம்பிப்பதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கு இணங்க பாடசாலையின் வகுப்பறைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாடசாலைகளைப் பொறுத்தவரையில் அகச் சூழலைப் பொருத்தவரைக்கும் பாடசாலை வகுப்பறைகளில் இரண்டு கட்டங்களாக மாணவர்கள் உள்வாங்கப்பட உள்ளார்கள். புறச் சூழலைப் பொறுத்தவரை அருகில் உள்ள கடைகள் மற்றும் போக்குவரத்து போன்ற இதர செயற்பாடுகளில் சில இடர்பாடுகள் காணப்படுகின்றன.

அதிலும் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பொதுப் போக்குவரத்துக்களைத் தவிர்த்து பெற்றோர்களின் சொந்த வாகனங்களில் வருவதன் மூலம் கொரோனாத் தொற்று ஏற்படுவதில் இருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். நீண்ட நாள்களாக மூடப்பட்டுள்ள பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட உள்ளதால் பாடசாலைகளைச் சுத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன். குறித்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மற்றும் அந்தந்தப் பிரிவு படைப்பிரிவினரின் உதவியையும் கோரியுள்ளேன்- என்றார். (ப)

## கூட்டமைப்புக்குள் குழப்பம்; தமிழர்களுக்கு நல்லதல்ல!

### நீலிக்கண்ணீர் வடிக்கிறார் அமைச்சர் நிமால்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நடக்கும் இப்போதைய மோதல்கள் நல்லதல்ல. தமிழ் மக்கள் நீண்டகாலமாகப் போராடுகிறார்கள். அவர்களின் பிரதிநிதியான நீங்கள் பொறுப்பாக இருக்க வேண்டாமா? என்று அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கூட்டமைப்புக்குள் ஏன் இப்பொழுது அதிக பிரச்சனையாக இருக்கிறது? உங்கள் உள்வீட்டுப் பிரச்சனையால் தான் மாநகரசபை பறிபோனது என செய்திகளில் படித்தேன். ஏன் இப்படியொரு நிலைமை வந்தது? நான் தனிப்பட்டரீதியில் அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரானவன். அதை விடுங்கள். ஆனால், அந்த மக்கள் நீண்டகாலமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். கூட்டமைப்பினர் அதற்கு பொறுப்பானவர்களாகச் செயற்பட வேண்டுமல்லவா. கூட்டமைப்புக்குள் இவ்வளவு பிரச்சினை வருவது நல்லதல்ல. அந்த மக்களுக்காக இதைச் சொல்கிறேன் - என்றார். (ப)

## பாடசாலைகளுக்கு தேவையான பஸ்களை டிப்போவில் பெறலாம்

### இ.போ.ச அறிவிப்பு

கொழும்பு.ஜன.8

மாணவர்களுக்கான போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்கள் பற்றாக்குறையாக நிலவும் பாடசாலைகளின் அதிபர்கள் தமக்குத் தேவையான பஸ்களை டிப்போவில் இருந்து பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டு பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் கல்வி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ஐ-இ)

# மோதிக்கொள்வதா? ஒன்றிணைவதா? நாம் சிந்தித்து முடிவெடுக்கவேண்டும்

## நீதி அமைச்சர் அலி சப்ரி எச்சரிக்கை

**கொழும்பு, ஜன.8**

**ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு தொடர்ந்து பிரிந்தி ருப்பதா அல்லது ஒன்றிணைந்து முன்னேறிச் செல்வதா என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். பழைய விடயங்களை மறந்து இனங்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்ப்பதற்கான இடமாக இந்த நாடாளுமன் றத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது; நாடு சுதந்திரமடைந்து 73 ஆண்டு கள் கடந்தும் எமது நாட்டில் இனங் களுக்கு இடையிலான வேறுபாடு கள் குறைந்த தாகத் தெரிய வில்லை. வேறுபட்ட இனத்தை, மதத்தைச் சேர்ந்தவராக இருப்ப தாலோ, வேறுபட்ட மொழியைப் பேசுவதாலோ எவரும் எதிரிகள் ஆகிவிடுவதில்லை. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதையே அரச மைப்பும் எமது தேசிய கீதமும் வலி யுறுத்துகின்றன. இதன் அடிப்படை யிலேயே பேச்சுச் சுதந்திரம் வழங் கப்பட்டிருக்கிறது. கடந்த காலத் தைத் திரும்பிப்பார்த் தால் அனை வரும் தவறு செய்த இடங்கள் பல இருக்கவே செய்கின்றன. 1958 மற்றும் 1978 கலவரங்கள், யாழ் நூலக எரிப்பு, 1983 கலவரம், கெப் பிட்டிக் கொல்லாவ தாக்குதல், காத் தான்குடி தாக்குதல். அண்மையில் இடம்பெற்ற சஹ்ரானின் தாக்குதல் எல்லாம் கரும் புள்ளிகளாக அமைந்தன. சமூகத்தை ஓரம்கட்டி இதற்குத் தீர்வு காண்பது என்பது தவ றான வழி யைத் தான் காட்டும். ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு தொடர்ந்து பிரிந்திருப்பதா அல்லது ஒன்றிணைந்து முன் னேறிச் செல்வதா என்பது குறித்து சிந்திக்க வேண்டும் - என்றார்.

(ப)

# பாடசாலைகள் ஆரம்பமானதும் சீருடைத் துணிகள் வழங்கப்படும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.8



பாடசாலைகள் ஆரம்ப மானதும் மாணவர் களுக்கான சீருடைத் துணிகள் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பி னர் அசோக அபேசிங்க நேற்றுமுன்தினம், வாய் மூல பதிலை எதிர்பார்த்து கேள்வியொன்றைச் சமர்ப்பித்தபோது, எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இடைக் கேள்வி ஒன்றைக் கேட் டார். “மாணவர்களுக்கு புதுவருடத்துக்கான சீரு டைத் துணி இதுவரை வழங்கப்படவில்லை” என்று அவர் சுட்டிக்காட்டி னார். இதற்குப் பதிலளிக் கும்போதே கல்வி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது; ‘சீருடைத் துணி வழங்கும் வேலைத்திட்டம் சிறப் பாக முன்னெடுக்கப்படு கின்றது. பாடசாலை களை ஆரம்பிக்காமல், சீருடைத் துணி விநியோ கிப்பது நடைமுறைக்குச் சாத்தியமானது அல்ல. தரம் ஒன்று முதல் தரம் 11 வரையான வகுப்புக் களுக்குரிய பாடப்புத்த கங்கள் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணை யத்தளத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளன. பாடசாலைகள் ஆரம்ப மானவுடன், புதிய புத்தகங் கள் மாணவர்களுக்கு நேரடியாக விநியோ கிக் கப்படும் - என்றார்.

(ஐ-இ)



கொவிட் - 19 வைரஸ் பரவல் ஏற்படாத வகையில் முன்னெடுக்கப்பட வேண் டிய விடயங்கள் தொடர்பாக மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதில் சுகாதார திணைக் கள அதிகாரிகள் மற்றும் முப்படையினர் கலந்து கொண்டனர். (ப)

# சிறுமி துஷ்பிரயோகம்; சந்தேகநபருக்கு மறியல்

திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 14 வய துடைய சிறுமியைத் துஷ்பிரயோ கத்துக்கு உட்படுத்தினார் என்ற சந் தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஒருவர் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

குறித்த நபர் பெற்றோருக்குத் தெரியாமல் சிறுமியை அழைத்துச் சென்று துஷ் பிரயோகத்துக்கு உட்ப டுத்தினார் என்று சிறுமி யின் பெற்றோரால் மூதூர் பொலிஸில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய குறித்த நபர் கைது செய் யப்பட்டார்.

அவரை நேற்று பொலி ஸார் மூதூர் நீதிமன்ற நீதிவானிடம் முற்படுத்தி னர். இதன்போதே நீதிவான் சந்தேக நபரை விளக்கமறி யலில் வைக்குமாறு உத்த ரவிட்டார். சந்தேக நபருக்கு எதிராக பல வழக்குகள் ஏற்கனவே மூதூர் நீதி மன் றில் நடைபெற்று வருகின் றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப)

# மரண அறிவித்தல்



## திசைவீரசிங்கம் ரூபசிங்கம்

**(ஓய்வு பெற்ற நில அளவை படவரைஞர்)**

துன்மலை இளவாலையை பிறப்பிடமாகவும், முருகன்பதி இல. 12(20), வளாகவீதி திருநெல்வேலி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திசைவீரசிங்கம் ரூபசிங்கம் நேற்று (07.01.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திசைவீரசிங்கம் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், முடமாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (M.P சுவாம்பிள்ளை & CO) பார்வதிப்பிள்ளை தம்பதியரின் இளைய மருமகனும், சற்குணேஸ்வரியின் (குழந்தை) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், செல்வரத்தினம், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரூபகோணேசன் (நோர்வே), ரூபினி (ஆசிரியை யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், உமாரஞ்சி, இரவீந்திரன் (S.P.H.I.D வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனும், சிந்தி, சாரா, ஆரூரன் (மூன்றாம் வருட மாணவன் மொறட்டுவ பல்கலைக்கழகம்), ஆரபி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2021) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முருகன்பதி,**
**இல 12 (20) வளாக வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



# கலந்துரையாடல்

மாவட்ட அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில் கிரா மிய பொருளாதார அபிவிருத்தி தொடர்பான விசேட முன்னேற்ற அபிவிருத்தி கூட்டங்கள் மாவட்டங்கள் தோறும் கட்டம் கட்டமாக நடைபெற்றுவருகின்றன. இந் நிலையில் திருகோணமலை மாவட்டத்துக்கான விசேட கூட்டம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள் ளது. இது தொடர்பில் ஆராயும் முன்னாயத்த கலந் துரையாடல் நேற்றுமுன்தினம் மாவட்ட செயல கத்தில் மாவட்டச் செயலர் சமன் தர்சன பாண்டிகோ ராளவின் தலை மையில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம் பத்தின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

(ஐ-இ)

☆ யாழ் நகரில் அனைத்து வகையான சீருடைத்-துணிகள்
☆ றெடிமேற் சேட் & புளு சோட்ஸ்
☆ பெண்களுக்கான தைத்த வெள்ளைச் சீருடைகளும்
☆ கண்டி காமன்ஸ், ஆண்களுக்கான வெள்ளை சேட் வகைகளும் கிடைக்கும்





**சென்னை பெசன் வேள்ட்**
**63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.**

# அம்பலப்பெருமாள் குளத்தின் பாலத்தை சீரமைத்து தாருங்கள்

## துணுக்காய் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.8
முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளத்தின் சேதமடைந்துள்ள பாலத்தை விரைவாகச் சீரமைப்பதற்கு துணுக்காய் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
துணுக்காய் அம்பலப்பெருமாள் குளம் வீதியில் மண்டைக் கல்லாறுக்கு மேலாக அமைக்கப்பட்டிருந்த பாலமே சேதம டைந்தது. இராணுவத்தினரும் கிராம மக்களும் இணைந்து பாலத்தை தற்கா லிகமாகச் சீரமைத்து குறித்த பாலம் ஊடாக தற்போது போக்குவரத்து நடை பெறுகின்றது. எனினும் அந்தப் பாலம் எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய நிலையில் காணப்படுகின்றது. துணுக் காய் பிரதேச செயலாளரும் நேரடியாக வந்து பாலத்தை பார்வையிட்டார். தற் போது அம்பலப்பெருமாள் குளத்தில் நெல் அறுவடை தொடங்கவுள்ள நிலை யில் பார ஊர்திகள் பாலத்தைக் கடப்ப தில் ஆபத்துகள் காணப்படுகின் றன. கோட்டைகட்டியகுளம் மற் றும் அம்பலப்பெருமாள் குளம் ஆகிய கிராமங்களுக்கு போக்கு வரத்துச் செய்வதற்கு இந்தப் பாலம் முக்கியத்துவமானது. பாலம் உடையுமானால் துணுக் காயில் இருந்து அக்கராயன் வரையான போக்குவரத்துகள் துண்டிக்கப்படும். எனவே குறித்த பாலத்தைச் சீரமைப்பதற்கு துணுக்காய் பிரதேச செயலகம் விரைந்து நடவ டிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ப-ரி2)



# நெல்லைக் கொள்வனவு செய்ய சுற்றறிக்கை கிடைக்கவில்லை

## முல்லை. மாவட்டச் செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.8
முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான சுற்றறிக்கை நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு கொழும்பில் இருந்து கிடைக்கப்பெற வில்லை என முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
காலபோக அறுவடையின் போது நெல் சந்தைப்படுத்தும் சபை விவ சாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்யும். எனினும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங் கள் நெல்லைக் கொள்வனவு செய்யும் முடிவுகளில் இல்லை. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங் கள் நெல்லைக் கொள்வனவு செய்வது என்றால் கூட மாவட்டச் செயலகமே நிதியைப் பெற் றுக் கொடுக்க வேண்டியிருக் கும். அவ்வாறு எந்த நிதியும் மாவட்டச்செயலகத்துக்குக் கிடைக் வில்லை. நெல் சந்தைப்படுத்தும் சபையின் பழைய சுற்றறிக்கை யின் படி சம்பா நெல் கிலோ 52 ரூபாவாகவும், நாட்டரிசி நெல் கிலோ 50 ரூபாவாகவும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளன - என் றார். (ப-ரி2)

# கிழக்கு மாகாண மக்களின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பேன்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கிழக்கு மக்களின் பல வேறுபட்ட பிரச்சினை களைத் தீர்க்க ஒத்து ழைப்பு வழங்குவே னென இந்திய வெளிவி வகார அமைச்சர் கலா நிதி எஸ்.ஜெய்சங்கர், இராஜாங்க அமைச்சர் வியாழேந்தி ரனிடம் உறுதியளித்துள்ளார் என்று அந்த அமைச் சின் ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது.
அந்த ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;
இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் உத்தி யோகபூர்வ பயண மொன்றை மேற் கொண்டு இலங்கைக்கு வந்தார். ஜனாதிபதி உள்ளிட்ட வெளிவிவ கார அமைச்சர் மற்றும் அரசில் அங்கம் வகிக் கும் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதிகளைச் சந் தித்து முக்கிய கலந்து ரையாடலில் ஈடுபட்டார். இந்நிலையில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்தி ரனை கொழும்பிலுள்ள தனியார் விடுதியொன் றில் சந்தித்துக் கலந்து ரையாடினார். இதன் போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.
அத்துடன் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் பொதுவாக எதிர்நோக்கும் பிரச்சி னைகள் மற்றும் தேவை கள் குறித்தும், கிழக்கு மாகாண மக்களுக்கு இருக்கின்ற விசேடமான பல்வேறுபட்ட அபிவி ருத்திசார்ந்த தேவைகள் தொடர்பாகவும் இரா ஜாங்க அமைச்சர் வியா ழேந்திரன் இந்திய வெளிவிவகார அமைச் சருக்குத் தெளிவுபடுத்தி னார் என்றுள்ளது. (ப)

# கமநலசேவை நிலையங்களில் அலைமோதும் விவசாயிகள்

## நெல்லைச் சந்தைப்படுத்த இந்த நிலை

முல்லைத்தீவு, ஜன.8
ஒவ்வொரு விவசாயிடம் இருந்தும் ஆயிரம் கிலோ நெல் கொள்வனவு செய் யப்படும் என அரசு அறி வித்திருந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத் தில், உள்ள கமநல சேவை நிலையங்களில் விவசாயிகள் திரண்டு வரு கின்றனர்.
அங்கு செல்லும் விவசா யிகள், தைப்பொங்கல் கழித்து அறுவடை தொடங்குவதால், அரச அறிவிப்பின் பிரகாரம் தமது நெல்லைக் கொள் வனவு செய்வதற்கு நடவ டிக்கை எடுங்கள் என கோரிக்கை விடுத்து வரு கின்றனர். எனினும் உய ரதிகாரிகளிடம் இது தொடர்பாகக் கலந்துரை யாடியே முடிவு தெரிவிக்க முடியும் என கமநல அபிவிருத்தி உத்தியோகத் தர்கள், விவசாயிகளுக் குத் தெரிவித்து வருகின்ற னர்.
"கடந்த காலங்களில் முல் லைத்தீவு மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபை விவசாயிகளிடம் இருந்து உரிய முறையில் நெல்லைக் கொள்வனவு செய்யவில்லை. நெல் சரியாக உலரவில்லை எனக் காரணம்காட்டி விவ சாயிகள் திருப்பி அனுப் பப்பட்டனர். கிராமங்க ளுக்குள் சென்று நெல் சந்தைப்படுத்தும் சபை நெல்லைக் கொள்வனவு செய்வதில்லை. எனவே கமநல சேவைகள் நிலை யங்கள் ஊடாக எமது நெல்லை விற்பனை செய்ய இவ்வாறு பதிவு களை மேற்கொள்கி றோம்" என்று விவசாயி கள் சுட்டிக்காட்டினர். (ப-ரி2)

# நோயாளரைப் பார்க்க வந்தவர் மீது தாக்குதல்

## பொலிஸில் முறைப்பாடு

சாவகச்சேரி,ஜன.8
சாவகச்சேரி மருத்துவமனையில் நோயாள ரைப் பார்வையிட வந்த நபரை, பாதுகாப்பு உத்தியோகத்தர் தாக்கியுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற் றது என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
நோயாளர் ஒருவரைப் பார்வையிட வந்த நப ருக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கும் இடை யில் பாஸ் நடைமுறை தொடர்பில் கருத்து முரண்பாடு ஏற்பட்டு, பின்னர் அது கைகலப்பாக மாறியது என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-159)

# விடுதி வசதிகளுடன் கூடிய ஆயுள்வேத வைத்தியசாலை

கிளிநொச்சி,ஜன.8
கிளிநொச்சி மாவட்டத்தில் விடுதி வசதிகளுடன் கூடிய விசேட கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்று 35 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட வுள்ளது.
குறித்த வைத்தியசாலை, கிளிநொச்சி நகரில் உள்ள கூட்டுறவு மண்டபத்துக்கு அருகில், ஏ-9 வீதியில் மாவட்டப் பயிற்சி வள நிலைய வளாகத்தில் அமைக் கப்படவுள்ளது.
இதற்கான காணியை மாவட்டச் செயலகம் அண்மை யில் ஒதுக்கியிருந்த நிலையில் அடுத்த கட்டப் பணிகளை விரைவில் ஆரம்பிப்பதற்குரிய ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப் பட்டது. (ஜ-214)



# கணபதி ஹோமம்

சாவகச்சேரி,ஜன.8
நாட்டில் அமைதி மற்றும் சமாதானம் வேண்டியும், கொரோனாத் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டியும் உசன் கஜகேணி விநாயகர் ஆலயத்தில் மகா கணபதி ஹோமம் நடைபெற்றது.
ஆலய பிரதம குரு கேதீஸ்வரன் குருக்கள் தலைமை யில் நடைபெற்ற கணபதி ஹோமத்தில் சிவாச்சாரி யார்கள் பலர் கலந்துகொண்டனர். (ஜ-9)

# தங்க முட்டை இடும் வாத்தை தாரைவார்க்க அனுமதியோம்

## துறைமுக விவகாரம் தொடர்பில் அமைச்சர் விமல் தெரிவிப்பு



**கொழும்பு, ஜன.8**

**தங்க முட்டை இடும் வாத்தை மாற்றானொருவருக்குக் கொடுத்து விடும் அளவுக்கு நாம் பலவீனமானவர்களல்ல. ஆகவே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் நிர்வாகத்தை இந்தியாவுக்கோ அல்லது மற்றுமொரு தரப்புக்கோ விட்டுக்கொடுத்து விட்டு நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கோ அல்லது வேறு தரப்பினருக்கோ விற்பனை செய்வதாகவோ அல்லது அவர்களுடன் ஒன்றிணைந்து நிர்வகிப்பதாகவோ இறுதித்தீர்மானம் எடுக்கப்பட்ட அமைச்சரவைப்பத்திரம் எதுவும் இதுவரையில் சமர்ப்பிக்கப்படவில்லை. அத்தகைய அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டால் மாத்திரமே, என்ன நடக்கப்போகின்றது என்பதை எம்மால் அறிந்து கொள்ள முடியும். இதுபற்றி கடந்த கட்சித்தலைவர்கள் கூட்டத்தின்போது துறைமுக அமைச்சரிடம் வினவினேன்.
அதற்கு, கிழக்கு முனைய நிர்வாகத்தை அரச தனியார் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதாயின் துறைமுகத்தின் 51 சதவீத உரிமை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமாக இருக்கும் அதேவேளை, அதில் பெரும்பான்மை நிர்வாக உரிமையும் உள்ளடங்கும் வகையிலேயே வழங்கப்படும் என்று பதிலளித்தார். ஆகவே இதுவிடயத்தில் எத்தகைய இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படுகின்றது என்று அவதானித்து வருகின்றோம் - என்றார். (ப)



# 51 தாய்மார்களுக்கு போசாக்கு பொதிகள்

சாவகச்சேரி,ஜன. 8
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 51 கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு போசாக்கு மற்றும் பிரசவத்துக்குரிய பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.
நகரசபையால் கடந்த வருட பாதீட்டில் நலன் புரிச் சேவைகள் திட்டத்தின் கீழ் 2 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது.
இந்த நிதியிலேயே தலா 4 ஆயிரம் ரூபா பெறுமதியான பொதிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. (ஐ-9)

# நிதியீட்டலுக்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜன. 8
கிளிநொச்சி மாவட்டத்தில் கொவிட்19 தாக்கம் காரணமாகப் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டும் வகையில் யு.எஸ். எய்ட் (USAID) திட்டத்தின் கீழ் நிதியீட்டம் பெறுவதற்காக விண்ணப்பித்தமை தொடர்பாக தெளிவூட்டும் முதற்கட்ட கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.
குறித்த கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.
இந் நிகழ்வில் தொழில் முயற்சியாளர்கள், மேலதிக மாவட்டச் செயலர் க.ஸ்ரீமோகனன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கி.ஸ்ரீபாஸ்கரன். மாவட்ட மனித வள அதிகாரி பா.ஸ்ரீபவன் மற்றும் மாவட்டச் செயலக பிரதேச செயலக அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ரி5-113)

# அரசியல் நோக்கத்துக்காகவே ஜனாஸா எரிப்புக்கு எதிர்ப்பு

## வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் விதண்டாவாதம்

கொவிட்19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடல்களை தகனம் செய்வதற்கு எதிராகக் கருத்துரைக்கும் அரசியல்வாதிகள் தங்களின் எதிர்கால அரசியல் இருப்புக் குறித்து அக்கறை கொண்டுள்ளார்கள் என்று வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் சி. பி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
கொவிட் 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம் என பொதுஜன பெரமுனவில் கூட்டணி அமைத்துள்ள ஒரு சிலர் குறிப்பிடுகிறார்கள். இவர்கள் தங்களின் எதிர்கால அரசியல் இருப்பைக் கருத்திற்கொண்டே இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகிறார்கள். கொவிட் - 19 விவகாரத்தில் அரசு சுகாதாரத் தரப்பினரது தீர்மானங்களுக்கு முன்னுரிமை வழங்கி அவற்றை மாத்திரமே செயற்படுத்தும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பொதுஜன பெரமுன தலைமையிலான அரசு அநீதி இழைக்கவில்லை. கூட்டணியாகச் செயற்படும்போது கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெறுவது இயல்பு. அனைத்து முரண்பாடுகளுக்கும் பேச்சின் ஊடாகத் தீர்வைப்பெற்றுக்கொள்ளலாம். அதனை விடுத்து முறையற்ற வகையில் செயற்படுவது பொருத்தமற்றதாகும். கொவிட் 19 வைரஸ் தாக்கம் இலங்கையில் மாத்திரம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என எதிர்த்தரப்பினர் பொருத்தமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். இலங்கையில் மாத்திரம் பொருளாதாரம் வீழ்ச்சியடையவில்லை. எம்மைக் காட்டிலும் பொருளாதாரத்தில் பலமிக்க நாடுகள் பொருளாதாரத்தில் வீழ்ச்சிடைந்துள்ளன - என்றார். (ப)

# 'பிரபாகம்' சஞ்சிகை வெளியீடு

கொடிகாமம், ஜன. 8
கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தரம் 8 மாணவர்களின் பிரபாகம் சஞ்சிகை வெளியீட்டு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணியளவில் பாடசாலை பொன்சபாபதி மண்டபத்தில் நடைபெறும்.
இந் நிகழ்வு தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவி காவியா குணபாலன் தலைமையில் இடம்பெறும்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்வி முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர் கஸ்பார் மது ரநாயகம் மற்றும் சிறப்பு விருந்தி னராக பாடசாலை உப அதிபர் வசந்தா இராசமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி5-159)



# சடலங்களை தகனம் செய்வது குறித்த வர்த்தமானியை நீக்கவும்

## அதாவுல்லா எம்.பி. கோரிக்கை

கொழும்பு.ஜன.8
கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரை தகனம் செய்யவேண்டும் என்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் சட்டவிரோதமானது.ஆகையால் அதை நீக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'கொரோனா வைரஸால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான வழிகாட்டல்களை நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது.
தனிமைப்படுத்தல் சட்டத்தில் அடக்கம் செய்ய முடியும் என்று.தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந் நிலையில், நாடாளுமன்றத்தைக் கூட்டாது, கொரோனா வைரஸால் உயிரிழப்போரை எரிக்க வேண்டும் என்று வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டமையை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஏமாளிகளாக்கும் செயற்பாடாகவே கருத வேண்டும்.
இந்த வர்த்தமானி அறிவித்தல் சட்டத்துக்கும், நாடாளுமன்ற கலாசாரத்துக்கும் எதிரானது என்பதால், அதனை உடனடியாக நீக்க வேண்டும்' - என்றார். (ஐ-இ)

# இந்திய வெளிவிவகார அமைச்சருடன் தமிழ் முற்போக்கு கூட்டணி சந்திப்பு

கொழும்பு, ஜன.8
இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை, தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழு நேற்று கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியது.
கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான இக்குழுவில் பிரதித் தலைவர் ராதாகிருஷ்ணன், பொதுச் செயலாளர் சந்திரா சாப்டர் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இதன்போது இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் மற்றும் ஒட்டுமொத்த தமிழ் மக்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. கடந்த ஒருவருடமாக மலையகத்தில் எந்தவொரு அபிவிருத்தியாக இருப்பினும் வாக்குறுதி, அறிவிப்பு என்ற அளவுகளில் மட்டுமே நிற்கிறது. ஆகவே இந்தியத் தோட்டத்துறை வீடு மற்றும் நலத்திட்டங்கள் உடன் மீள ஆரம்பிக்கப்படவேண்டும், இராமேஸ்வரம் மன்னார், தூத்துக்குடி-கொழும்பு கப்பல் சேவைகளை ஆரம்பிக்க இந்தியா ஆவன செய்யவேண்டும், நோர்வூட் கிளங்கன், நுவரெலியா மருத்துவமனைகளுக்கு பி.சி.ஆர் இயந்திரங்கள் இரண்டு வழங்கப்படவேண்டும், இந்தியா, இலங்கையின் உண்மை நண்பன் என்பதை சிங்கள மக்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும் ஆகிய கோரிக்கைகள் தமிழ் முற்போக்கு கூட்டணியால் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன. (ஐ)

# வீடுகளுக்குள் வெள்ளம் புகும் அபாயம்

## வடிகாலமைப்பையும், வீதியையும் சீர்செய்யுமாறு மக்கள் கோரிக்கை

பூநகரி, ஜன.8

**வடிகாலமைப்பு, வீதி என்பவை சீரின்மையால் பூநகரி 4ம் கட்டை பகுதியிலுள்ள வீடுகளுக்குள் வெள்ளம் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பில் தெரியவருவதாவது, மன்னார்-பூநகரி வீதியில் 4ஆம் கட்டை சந்தியிலிருந்து கிராமத்துக்குச் செல்லும் பாதை, சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் மழைக்காலங்களில் இப்பகுதியூடாக பயணிக்கும் மக்கள் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

மேலும் மழைக்காலங்களில் காவாக் குளம் நோக்கி வரும் வெள்ளம் மக்களின் இருப்பிடங்கள் ஊடாக குளத்தைச் சென்றடைவதால் வீடுகளுக்குள் வெள்ளம் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இவற்றைக் கருத்திற்கொண்டு வீதியை சீரமைத்துத்தருமாறும், முறையான வடிகாலமைப்பை ஏற்படுத்தித் தருமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-ரி1)

## முகமூடிக் கொள்ளையர்கள் வாள்முனையில் அட்டகாசம்

### 12 பவுண் திருட்டு!!

வவுனியா, ஜன.8

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த முகமூடிக் கொள்ளையர்கள் அங்கிருந்து 12 பவுண் நகைகளையும், 15 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் குறித்த பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்றுள்ளனர்.

அங்கு உறங்கிக்கொண்டிருந்த முதியவரையும், பெண்ணையும் வாள் முனையில் அச்சுறுத்தி தாலிக்கொடி உட்பட தங்க நகைகளையும், 15 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடியுள்ளனர் .

இதேவேளை மற்றைய அறையில் உறங்கிக்கொண்டிருந்த பெண் ஒருவர் சத்தம் கேட்டு வெளியில் எழுந்துவந்த நிலையில் அவர் அணிந்திருந்த தங்க நகைகளையும் பறித்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு சென்ற குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் மூன்று நபர்கள் ஈடுபட்டிருந்ததுடன், முகமூடி அணிந்திருந்த அவர்கள் கைகளில் வாள்களுடன் குறித்த வீட்டிலிருந்தோரை அச்சுறுத்தியுமுள்ளனர் எனத் தெரிவித்த பொலிஸார், அக் கொள்ளையர்கள் மொத்தமாக 12 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் எனவும் தெரிவித்தனர். (ந-110)

## விமான நிலைய பதில் மேலாளருக்கும் கொரோனா

கொழும்பு, ஜன.8

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பதில் மேலாளரும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். அவருடன் நெருங்கிப் பழகிய 15 க்கும் மேற்பட்ட விமான நிலைய ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என விமான நிலைய சுகாதார அலுவலர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## தனிமைப்படுத்தலுக்கு அதிக கட்டணம்!!

### விசாரணை வேண்டும் என்கிறார் நாமல்

கொழும்பு, ஜன.8

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புபவர்களை ஹொட்டல்களில் தனிமைப்படுத்தப்படுவதை நிறுத்தி, அவர்கள் அனைவரையும் இலவசமாக தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.



மேலும், வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புபவர்கள் சில ஹொட்டல்களில் அதிக கட்டணத்துடன் தனிமைப்படுத்தப்படுகின்றனர். எனவே கடந்த காலத்தில் ஹொட்டல்களில் தனிமைப்படுத்தலுக்காக அறவிடப்பட்ட கட்டணம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வது மிகவும் அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளார். (ந-இ)

## பெருமளவு மதுப் போத்தல்களுடன் கைதானவர்களுக்குப் பிணை

கொடிகாமம், ஜன.8



அனுமதியின்றி அளவுக்கு அதிகமான மதுபானப் போத்தல்களைக் கொண்டுசென்ற நான்கு நபர்கள் கைதுசெய்யப்பட்டு 2 லட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது; சந்தேக நபர்கள் அதிகளவான சாராயப் போத்தல்கள் மற்றும் பியர் ரின்களை வாகனமொன்றில் கொண்டு சென்றுள்ளனர்.

வாகனத்தை சோதனையிட்ட போக்குவரத்துப் பொலிஸார் அவற்றைக் கைப்பற்றியதுடன் நால்வரையும் கைதுசெய்துள்ளனர்.

தென்மராட்சியை சேர்ந்த இரு நபர்களும் பளையைச் சேர்ந்த இரு நபர்களுமே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர். சந்தேகநபர்கள் சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்ட போது அவர்கள் 2 இலட்சம் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (வ-159)

## இத்தாலி நகரில் இலங்கையர் சாவு!

கொழும்பு, ஜன.8

இத்தாலியின் ரோம் நகரத்தில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பகுதியிலுள்ள மாடி வீடொன்றில் வாழ்ந்த நிலையில் மொட்டை மாடியில் இருந்து தவறி விழுந்தமையால், படுகாயமடைந்திருந்த இவர் ரோம் சங்கமில்ல வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

ரோம் வியாகாசியோ பிரதேசத்தில் தொழில் புரிந்து வந்த சம்பத் என்ற 32 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவர் எனக் குறிப்பிடப்படுகிறது. உயிரிழந்தவர் கொழும்பின் புறநகர் பகுதியான பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை வியாகாசியோ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந)

## கடன் கொடுத்தவர் தாக்குதலுக்கு உள்ளானார்.

கொடிகாமம், ஜன. 8

கடன் கொடுத்த நபரொருவர் கடனைத் திருப்பிக் கேட்கச் சென்றபோது கடன் வாங்கியவரால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டுவில் பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி மடத்தடியைச் சேர்ந்த நவரத்தினசிங்கம் நவஜீவன் வயது 46 என்பவரே காயமடைந்தவராவார். சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி5-159)

## யாழ். மாநகரசபை பகுதியில் கடந்த ஆண்டு 1,364 பி.சி.ஆர்.

வலி.தென்மேற்கு, ஜன.8

யாழ்ப்பாண மாநகரசபை பகுதியில் கடந்த ஆண்டு ஆயிரத்து 364 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இவர்களில் 4 பேருக்கு மட்டுமே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களிலிருந்து வந்தவர்கள், கொரோனா நோயாளர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள், ஓட்டோ சாரதிகள், கொழும்பிலிருந்து வாகனம் செலுத்தி வந்த சாரதிகள், வர்த்தகர்கள் உட்பட ஆயிரத்து 364 பேருக்கு கடந்த ஆண்டு யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் வைத்து பி.சி.ஆர்.பரிசோதனைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ற-115)



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வசந்தபுரம் கிராமத்தில் வசித்துவரும் 74 மாணவர்களுக்கு நல்லூர் சாயி இல்லத்தின் உதவும் பணியால் நேற்று கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச)

## இன்றைய நாள்

**மேடம்:** சகோதர வகையில் நீங்கள் எதிர்பார்த்த நல்ல விஷயம் வெற்றிபெறும். பொறுமை அவசியம். கடன் வாங்க வேண்டிய நிலை உண்டாகும் . நீங்கள் எடுத்த திட்டம் நிறைவேறும்.

**இடபம்:** பணியாளர்கள் ஊக்கத்துடன் செயல்பட்டு நன்மை அடைவீரர்கள். சில வீண் செலவுகள் ஏற்படும். வியாபாரம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:**எதிர்பாராத செலவுகள் ஏற்படும். குடும்பத்தின் ஆதரவு உண்டு. சிறு சலசலப்பு ஏற்பட்டாலும் சாதுார்யமாகச் செயல்பட்டு சமாளிப்பீர்கள். சில பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள்.

**கடகம்:** பொறுமை மிக அவசியம். ஆர்வத்துடன் நன்மை செய்வீர்கள். உங்களுக்குத் தேவையான பணம் கைக்கு வருவதற்குப் பலர் உதவுவார்கள்.

**சிம்மம்:** பிள்ளைகளின் விருப்பத்தை சிறு சிரமத்துடன் நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தினர் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்

**கன்னி:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த விஷயம் வெற்றிபெறும். செலவுக்கு வாய்ப்பு உண்டு என்பதால் அதற்குத்தயாராக இருங்கள். முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்க இயலாது.

**துலாம்:** அலைச்சலும், செலவுகளும் ஏற்படும்போது இயல்பாக ஏற்பீர்கள். சகோதர, சகோதரிகளால் சில பிரச்னைகள் ஏற்பட்டு நீங்கும். சகபணியாளர்களால் சிறு சிறு பாதிப்புகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** கடன் வாங்க வேண்டாம். நண்பர்கள் அந்தரங்க விடயங்களைப் பகிர்வார்கள். சரிவுகளை சமாளித்து வெற்றிப் பாதையை நோக்கிச் செல்வீர்கள். பக்குவத்தால் எதையும் சமாளிக்க முடியும்.

**தனுசு** பெண்கள் தொடங்கும் முயற்சிகள் ஓரளவு வெற்றி தரும். குடும்பத்தில் இழந்திருந்த நிம்மதி பிள்ளைகளால் மீளும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம்.

**மகரம்** நன்மைகள் சிறிதளவு தள்ளிப்போனாலும் நன்கு முடியும். இதுவரை இருந்த பொருளாதாரப் பிரச்சினைகள் குறையும். வசிப்பிடம் வாங்கத் திட்டமிட்டவர்களுக்கு வீடு அமையும்.

**கும்பம்:** சிலருக்கு சமாளிக்கும்படியான சிறு சிறு செலவுகள் உண்டாகும். உங்கள் துறையில் மதிக்கும் பெரியவர்களுடன் சந்திப்பு நிகழும். மனசங்கடங்கள் தோன்றும்.

**மீனம்:** கடந்த இரண்டு நாள்களாக இருந்து வந்த குழப்பங்கள் தீரும். அளவுக்கு அதிகமாக எவரிடமும் பழக வேண்டாம். உங்கள் செயல்கள் வீண் பழி ஏற்படுத்தாமல் இருக்கப் பார்த்துக் கொள்ளுங்கள்.

## நெற்பயிர்களுக்கு நோய்த் தாக்கம்

முல்லைத்தீவு, ஜன.8

உடையார்கட்டு கமநல சேவைத் திணைக்களத்தின் கீழ் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் "எரிபந்தம்" நோய்த்தாக்கம் மற்றும் "சந்து குத்தி" பூச்சித்தாக்கத்துக்கு உட்பட்டுள்ளன.
இந்தத் திணைக்களத்தின் கீழ் குளத்து நீரையும், மழையையும் நம்பியும் மூவாயிரத்து நூறு ஏக்கர் அளவில் காலபோக நெற்பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான நோய்த் தாக்கங்கள் அதிகரித்து வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்த தமது ஆலோசனையைப் பெற்று களைநாசினிகளைப் பயன்படுத்துமாறு உடையார்கட்டு விவசாய போதனாசிரியர் கேட்டுக்கொண்டுள்ளார். (வ-19)

## பாடசாலைகள் ஆரம்பம்; ஓட்டமாவடியில் கலந்துரையாடல்

கொழும்பு, ஜன.8

நாட்டில் எதிர்வரும் 11 ஆம் திகதி முதலாம் தவணைக்கான பாடசாலைகள் ஆரம்பமாகும் நிலையில், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் கல்வி அதிகாரிகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தி னருடனான விசேட கூட்டம் வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.
இதன்போது முடக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வரும் மாணவர்களை பாடசாலைகளில் அனுமதிக்கக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டது. தற்போதைய கொரோனாக் காலத்தில் மாணவர்கள், பெற்றோர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் தொடர்



பாக அனைவரும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் பேசப்பட்டது.
மேலும் ஓட்டமாவடி பிரதேசத்தில் டெங்குத் தாக்கமும் அதிகரித்து காணப்படும் நிலையில் மாணவர்களின் பாதுகாப்புக் கருதி பெற்றோர் மற்றும் பிரதேச சமூக மட்ட அமைப்புக்கள் இணைந்து பாடசாலைகளைச் சுத்தம் செய்து டெங்கு புகை விசிறல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அதிபர்கள் உடனடியாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-150)

## ஜீவன் – ஜெய்சங்கர் சந்திப்பு!

மலையகம், ஜன.8

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நேற்றுக் காலை இடம்பெற்றது. கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.
இந்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வீடமைப்புத் திட்டங்கள் சம்பந்தமாக இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.
அத்துடன், மலையக தமிழர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக இந்தியா தொடர்ந்தும் உதவியளிக்கும் என உறுதியளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர், கல்வி, சுகாதாரம் மற்றும் விளையாட்டுத்துறை மேம்பாடுகளுக்கும் இந்தியாவின் ஒத்துழைப்புகள் தொடரும் எனவும் தெரிவித்துள்ளார். (ற-இ)



## 50 குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள்

வேலணை, ஜன.8

வேலணை செட்டிப்புலம் பகுதியில் 50 குடும்பங்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தீவக கிளையினரால் உலர் உணவுப் பொருள்கள், நுளம்புவலைகள் மற்றும் கிருமிநாசினிகள் போன்றவை வழங்கப்பட்டுள்ளன.
முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.
இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் மாணிக்கவாசகர் இளம்பிறையன், வேலணை பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலன், தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர் கருணாகரன் குணாளன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ற-இ)

## வீட்டுத்திட்டம் தொடர்பில் போலி அழைப்புக்கள்

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

பருத்தித்துறை, ஜன.8

வீட்டுத்திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் போலியான தொலைபேசி அழைப்புக்கள் குறித்து அவதானத்துடன் இருக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
கடந்த வாரம் இனந்தெரியாத நபரொருவரால் எமது கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கு வீட்டுத் திட்டத்துக்கு அவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என தொலைபேசி அழைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பில் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்காக தொலைபேசி மூலமான பணப் பரிமாற்றல் மூலம் குறித்ததொரு தொகையை அனுப்புமாறும், அதன் பின் வீட்டுத்திட்டத்துக்கான பணம் விடுவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வீட்டுத்திட்டம் வழங்குவது தொடர்பில் எதுவித பணமும் மக்களிடம் இருந்து அறவிடப்படுவதில்லை. வீட்டுத்திட்டமானது அரசால் வழங்கப்படும் உதவியாகும். இது தனிநபர்களால் வழங்கப்படுவதில்லை. வீட்டுத்திட்டம் தொடர்பான வேலைகளில் கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மட்டுமே தொடர்புபட்டவர்கள். பொதுமக்கள் மோசடிக்காரர்களிடம் சிக்கி பணத்தை இழக்க வேண்டாம்.
மோசடி பற்றிய தகவல்களை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவியுங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# மாகாண முறைமையை மாற்றினால் இலங்கை ஆபத்தை எதிர்கொள்ளும்

## பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பில் சஜித் எச்சரிக்கை

**கொழும்பு, ஜன. 8**

**இலங்கையின் மாகாணசபை முறைமையில் மாற்றம் செய்யாது அதனை தற்போது உள்ளவாறே பேண வேண்டும். இதை மீறி மாகாண சபை முறைமையில் அரசு மாற்றத்தை ஏற்படுத்தினால் பெரிய விளைவுகளை நாடு சந்திக்க வேண்டிவரும்.**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்துக் கலந்துரையாடும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாங்கள் அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குகின்றோம். அது நாட்டின் இறைமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது என்று உயர்நீதிமன்றமே கூறியுள்ளது. இதனால் மாகாண சபை முறைமையில் மாற்றம் செய்யக்கூடாது. அது தற்போது உள்ளவாறே பேணப்பட வேண்டும் என்பதே எமது கட்சியினரின் நிலைப்பாடாக உள்ளது. இதன்படி மாகாண சபை முறைமை பலப்படுத்தப்பட வேண்டுமே ஒழிய, அதனைப் பலவீனப்படுத்த எவருக்கும் இடமளிக்கக்கூடாது.

இதையும் மீறி மாகாணசபை முறைமையில் அரசு மாற்றத்தை ஏற்படுத்தினால் பெரிய விளைவுகளை நாடு சந்திக்க வேண்டிவரும், என்றார். (ஒ.22)



இலங்கை இராணுவத்தின் சமிக்ஞை படையணியின் "வரலாற்று நூல்" பணிக்குழாம் பிரதானியும் படையணி தளபதியுமான மேஜர் ஜெனரல் டி.ஏ.பி.என் தெமடன்பிட்டியவால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விடம் கையளிக்கப்பட்டது. இந் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. (ந)

## அலுவலர்களுக்கு அச்சுறுத்தல்

# கண்டிக்கின்றது யாழ்.மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜன.8

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நாவற்குழி மேற்கு கிராம சேவகர் அலுவலகத்துள் மர்ம நபர்கள் புகுந்து அலுவலர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தமைக்கு யாழ்ப்பாண மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

கிராம அலுவலர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் உயர்ந்தபட்ச நடவடிக்கைகள் உரிய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (வ-இ)

# அடிப்படைவாதிகளை உடன் கைதுசெய்க!

## கூறுகிறார் விமல் வீரவன்ஸ



கொழும்பு, ஜன.8

அஸாத் சாலி உட்பட அடிப்படைவாத நோக்கில் செயற்படும் அனைவரையும் உடனடியாகக் கைதுசெய்ய வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்காவிட்டால் பாரிய விளைவுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும் என்று அஸாத் சாலி தெரிவித்திருந்தார்.

அவ்வாறெனில் அவர் தற்கொலைக் குண்டுதாரியாக மாறப்போகின்றாரா? என கேள்வியெழுப்பியுள்ள வீரவன்ஸ, அவ்வாறான அடிப்படைவாத நோக்கில் செயற்படும் அனைவரையும் உடனடியாகக் கைதுசெய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். மேலும், ஒட்டுமொத்த உலகமுமே கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், இலங்கையில் வைரஸ் தொற்றால் உயிரிழப்போர் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயினும் அவர்களது சடலங்களைத் தகனம் செய்யவேண்டும் என்ற தீர்மானம் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டது. கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களுக்கு மாத்திரமே தகனம் செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஏனைய நோய்களால் உயிரிழப்போரின் சடலங்களுக்கு அவர்களது மதமுறைப்படி இறுதிச்சடங்குகளை நடத்துவதில் எவ்வித தடையும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

# தமிழர் மீதான அச்சமே சுரேன் எம்.பியின் கருத்து

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.8

சிங்கள தேசத்தின் அச்சத்தையே நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிரொலித்துள்ளார் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

கனடா, ஒன்றாரியோ நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட தமிழினப் படுகொலையை மெய்ப்படுத்திய கல்விவார சட்டவரைவு இலங்கையின் தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டை அழிக்கிறதென இலங்கையின் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான சுரேன் ராகவன் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு, கனடாவில் வலுவுள்ள சக்தியாக ஈழத் தமிழ் சமூகம் மாறிவருகின்ற நிலையில், அதன் மீதான இலங்கை அரசின் அச்சத்தையே சுரேன் ராகவன் எம்.பியின் கருத்து வெளிப்படுத்துகின்றது. ஒரு வகையில் இது புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மீதான அச்சமாகும்.

மேலும் தமிழினப் படுகொலைக்கு பரிகாரநீதி கிடைக்காத வரையிலும் இலங்கைத்தீவில் இனநல்லிணக்கம் என்பது சாத்தியமற்றது.

தமிழினப் படுகொலைக்கான பொறுப்புக்கூறலும், அதற்கான பரிகாரநீதியும் எட்டும்போது, இன நல்லிணக்கம் என்பது இலங்கைத்தீவில் சாத்தியமாகும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது. (ந)

# சுகாதார வழிமுறைகளுடன் விளையாட்டுப் போட்டிகள்

கொழும்பு, ஜன.8

புதிய சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சருக்கும் இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்சவுக்கும் இடையில் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, வைரஸ் தொற்று அபாயம் அதிகமுள்ள மேல் மாகாணம் தவிர ஏனைய மாகாணங்களில் விளையாட்டுப் போட்டிகளை ஆரம்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ளவர்களை எக் காரணம் கொண்டும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்க வேண்டாம் என்றும் இந்தக் கலந்துரையாடலின்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ-இ)

# ஜனவரி 18 இல் தனியார் பஸ்கள் பணிப் புறக்கணிப்பு

கொழும்பு, ஜன.8

இலங்கையில் உள்ள அனைத்து தனியார் பேருந்துச் சங்கங்களும் இணைந்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளன. அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் அன்ஜன பிரியன்ஜின் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், பேருந்துப் போக்குவரத்தில் ஈடுபடும் ஊழியர்கள் முகம்கொடுக்கும் சிக்கல்களுக்குத் தீர்வு கிடைக்காமை காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் கூறிய 4 வீத வட்டியின் கீழ் பேருந்து உரிமையாளர்களுக்கு 3 லட்சம் ரூபா கடன் வசதி வழங்குவது உட்பட பல்வேறு வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை என்றால் 18ஆம் திகதியில் இருந்து பணிப்புறக்கணிப்பு ஆரம்பிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

# ஜனவரி மாத ராசிபலன்கள்







வாழ்க்கையில் சந்திக்கும் கஷ்ட நஷ்டங்களை உங்களது அனுபவமாக எடுத்துக் கொள்ளும் திறமை உடைய கன்னி ராசியினரே!

வாழ்க்கையில் நீங்கள் உழைப்பினால் சாதிப்பவர்கள். இந்த மாதம் எதிர்ப்புகள் விலகும். தொல்லைகள் தீரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். வீண் கவலைகள் ஏற்பட்டு நீங்கும். கோபத்தைக் கட்டுப்படுத்துவது நல்லது. பணவரத்து தாமதப்படும். வீண் ஆசைகள் உண்டாகலாம். கவனம் தேவை.

தொழில் வியாபாரத்தில் வேகம் குறைந்தாலும் திருப்திகரமாக நடக்கும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் கவனத்துடன் செயல்படுவது நல்லது. எதிர்பார்த்த ஆர்டர்கள், சரக்குகள் வருவதிலும் தாமதம் உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செயல்படுவதை தவிர்ப்பது நல்லது. மேல் அதிகாரிகள் மூலம் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் குறையும். எதிர்பார்த்த காரியங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகள் விஷயத்தில் கவனமும், அனுசரணையும் இருப்பது நல்லது. உறவினர், நண்பர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கி நெருக்கம் ஏற்படும்.

**பெண்களுக்கு:** வீண் கவலைகள் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்கள் ஆலோசனைகளை ஏற்கும் முன் அது பற்றி பரிசீலிப்பது நல்லது.

**கலைத்துறையினருக்கு:** உயர்நிலையில் உள்ளவர்களுடன் மனவருத்தம் ஏற்படும்படியான சூழ்நிலை வரும். வாகனங்கள் மூலம் செலவு உண்டாகலாம். எதிர்பார்த்த பண வரவு இருக்கும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கலாம்.

**அரசியல் துறையினருக்கு:** திறமையான செயற்பட்டால் பாராட்டு கிடைக்கும். விரும்பத்தகாத வாக்குவாதங்கள் ஏற்படலாம். எல்லா வித வசதிகளும் உண்டாகும். தேடிப்போன்தும் தானாகவே வந்து சேரும். அறிவுத்திறன் அதிகரிக்கும்.

மாணவர்களுக்கு எதிலும் நல்லது கெட்டதை யோசித்து அதன் பின்பு அந்தக் காரியத்தில் ஈடுபடுவது நன்மைகளைத் தரும். கல்வியில் கூடுதல் கவனம் தேவை.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதம்:**

இந்த மாதம் பலவகைகளிலும் நன்மை உண்டாகும். இழுபறியாக இருந்த சில வேலைகள் சாதகமாக நடந்து முடியும். பணவரத்து அதிகரிக்கும். தெளிவான முடிவு எடுப்பதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். அரசாங்கம் தொடர்பான விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். மரியாதையும் அந்தஸ்தும் அதிகரிக்கும். கடினமான முயற்சிகளைக் கூட எளிமையாக செய்ய முடியும். தொழில் வியாபாரத்தில் இருந்த பணத் தட்டுப்பாடு நீங்கும். வரவேண்டிய கடன்பாக்கிகள் வந்து சேரும் வியாபாரம் தொடர்பான பயணங்களினால் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள்.

**அஸ்தம்:**

இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சக ஊழியர்களுடன் இருந்த கருத்து வேற்றுமை குறையும். வர வேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். வாழ்க்கைத் துணையின் உடல்நலத்தில் கவனம் தேவை. அடுத்தவர் செயல்கள் உங்கள் கோபத்தைத் தூண்டுவதாக இருக்கலாம். அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளிடம் கனிவாக நடந்து கொள்வது நல்லது. இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும். கவுரவம் உயரும். மற்றவர்களிடம் நன்மதிப்பு உண்டாகும்.

**சித்திரை 1, 2ஆம் பாதம்:**

இந்த மாதம் மாணவர்கள் கல்வியில் இருந்த தடைகள் விலகி முன்னேற்றம் காண்பீர்கள். மற்றவர்களுடன் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பீர்கள். எதைப்பற்றியும் கவலைப்படாமல் திடமான முடிவுடன் எந்த வேலையையும் செய்து முடிப்பீர்கள். ஏதேனும் வீண் கவலைகள் ஏற்படலாம். காரியங்களில் தாமதமான போக்கு காணப்படும். உங்கள் வார்த்தைக்கு வெளிவட்டாரத்தில் மதிப்பு இருக்காது. உங்கள் பேச்சை வெறும் பேச்சுப் போல் மற்றவர்கள் நினைப்பார்கள். அதனால் அளவுடன் பேசுவது நல்லது.

# மருத்துவமனைகளில் கொரோனா கொத்தணி



### எச்சரிக்கிறது அரச தாதியர் சங்கம்

கொழும்பு, ஜன.8

நாடு முழுவதும் உள்ள முக்கிய மருத்துவமனைகளில் கொரோனாக் கொத்தணிகள் உருவாகும் அபாயம் அதிகமாக உள்ளது என அரச தாதியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுபோன்ற நிலை ஏற்பட்டால், அரசாங்கமும் சுகாதார அதிகாரிகளும் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என இச்சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரியா தெரிவித்துள்ளார். கொழும்பு தேசிய வைத்தியசாலை, கம்பஹா வைத்தியசாலை மற்றும் கண்டி வைத்தியசாலை உள்ளிட்ட பல வைத்தியசாலைகள் இந்த சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளன என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-இ)

# மாணவர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி, ஜன.8

பெருமாள் சிவகுமார் சமூக சேவைகள் அமைப்பின் ஊடாக கிளிநொச்சி, ஆனைவிழுந்தான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய 18 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று பாடசாலை அதிபர் திருமதி. சி.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளர் கி.கமலராஜன், சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம், அக்கராயன் மகா வித்தியாலய அதிபர் க.மதுரநாயகம், ஆனைவிழுந்தான் கிராம அலுவலர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-222)





# எங்கள் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் போலியானவை!!!

### மீண்டும் முழங்குகிறார் சரத் வீரசேகர

கொழும்பு, ஜன. 8

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை படையினருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் போலியானவை என்பதை இம்முறை நிரூபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு சூளுரைத்துள்ளது. நாடாளுமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

பிரதம அமைச்சருடனான கேள்வி பதில் நேரத்தின் போது ஆளுங்கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுபபினர் நளின் பெர்ணான்டோவால், மனித உரிமைகள் கூட்டத்தொடர் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. 'ஜெனிவாவில் எமக்கு எதிராக 8 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவை அனைத்தும் போலியானவை. இது தொடர்பில் ஆராய்ந்துகூட பார்க்காமல் ஏற்றுக்கொண்டு இணை அனுசரணை வழங்குவதற்கு நல்லாட்சி அரசின் வெளிவிவகார அமைச்சர் நடவடிக்கை எடுத்தார். எது எப்படியிருந்தாலும் மேற்படி குற்றச்சாட்டுகள் உண்மையற்றவை என்பதை இம்முறை மார்ச் மாதக் கூட்டத்தொடரில் நிரூபிப்போம்' என்றார். (ஒ.44)

# ஜனநாயகத்தைப் போதிக்கும் அமெரிக்காவில் அல்லோலகல்லோலம்

அமெரிக்காவில் கடந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. இதில் அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதியும் குடியரசுக் கட்சியின் வேட்பாளருமான ட்ரம்பை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான பைடன் வெற்றிபெற்றார்.

பைடனின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக அமெரிக்க காங்கிரஸ் நேற்றுக் கூடியது. இதன் போது அத்துமீறி காங்கிரஸுக்குள் நுழைந்த பல நூறு ஆர்ப்பாட்டக்காரர்கள் (ட்ரம்பின் ஆதரவாளர்கள்) பெரும் கலவரத்தில் ஈடுபட்டனர். இதில் நால்வர் உயிரிழந்தனர். காங்கிரஸ் க்ட்டடமே பெரும் போர்க்களமானது. (ம)





## கலவரத்தைத் தூண்டும் காணொலிகள்

# ட்ரம்பின் சமூகவலைத்தளங்கள் அனைத்தும் நேற்று முடக்கம்!

### பேஸ்புக், ருவிட்டர் அதிரடி

வொஷிங்டன், ஜனவரி. 8

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் பேஸ்புக், ருவிட்டர் கணக்குகள் நேற்று அந்தந்த நிர்வாகங்களால் முடக்கப்பட்டன.

பைடனை வெற்றியாளராக அறிவிக்கும் அமர்வு காங்கிரஸில் நேற்று இடம்பெற்றது. இதன்போது ட்ரம்பின் ஆதரவாளர்களால் பெரும் கலவரம் முன்னெடுக்கப்பட்டது. அமெரிக்கத் தேர்தல் வரலாற்றில் என்றுமே இல்லாத கறுப்பு நாளாக இந்த நாள் அமைந்தது. கலவரம் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது கருத்து வெளியிட்ட அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ஆதரவாளர்களே உங்கள் வலியை உணர்கிறேன், உங்கள் மனவேதனையை அறிவேன். தேர்தலில் முடிவைத் திருடிவிட்டார்கள். அது மிகப்பெரிய தேர்தல் வன்முறை என்பது அனைவருக்கும் தெரியும். இப்போது அமைதியாகக் கலைந்து செல்லுங்கள். அமைதி தேவை. சட்ட ஒழுங்கை மதித்து நடவுங்கள். இது மோசடியான தேர்தல், இவர்களின் கையில் ஆட்சியை ஒப்படைக்க முடியாது. அமைதியாகச் செல்லுங்கள்' எனத் தெரிவித்திருந்தார். இவை சமூக வலைத்தள விதிகளுக்கு முரணான பதிவுகள் என்ற காரணத்தால் சமூக வலைத்தளங்கள் அந்தப் பதிவுகளை நீக்கின. அத்துடன் எந்தக் கருத்துக்களையும் காணொலிகளையும் பதிவிடுவதற்கு ட்ரம்பின் கணக்குக்கு தற்காலிகத் தடையும் விதிக்கப்பட்டது. (ம)

# பைடன்தான் வெற்றியாளர்: 20ஆம் திகதி பதவியேற்பு

### அறிவித்தது நாடாளுமன்றம்

வொஷிங்டன், ஜன. 8

அமெரிக்க அதிபர் தேர்தலில் பைடன்தான் வெற்றியாளர் என்று அந்த நாட்டின் நாடாளுமன்றம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது.



இந்த அறிவிப்பை விடுப்பதற்காக நேற்று சபை கூடியபோது ட்ரம்பின் ஆதரவாளர்கள் கடும் குழப்பங்களை மேற்கொண்டனர். இந்தக் கலவரங்களால் நால்வர் உயிரிழந்தனர். இதையடுத்து நாடாளுமன்றம் உச்சக்கட்டப் பாதுகாப்புக்குள் கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் பிரதி நிதிகள் வாக்கெடுப்பு இடம்பெற்று 306:232 என்ற அடிப்படையில் பைடன் வெற்றிபெற்றார்.

பைடன் வெற்றிபெற்றார் என்று தற்போதைய துணை அதிபரான மைக் பென்ஸ் உத்தியோகபூர்வமாக அறிவிக்க ட்ரம்பும் ஆட்சி மாற்றத்துக்கு வேறு வழியின்றி ஒப்புதல் வழங்கினார். (ம)

# கலவரத்துக்குக் காரணம் ட்ரம்ப்: முன்னாள் அதிபர் ஒபாமா சாடல்



வொஷிங்டன், ஜன. 8

அமெரிக்காவில் நேற்று இடம்பெற்ற கலவரங்களுக்குக் காரணம் தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்தான் என்று முன்னாள் ஜனாதிபதியும் ஜனநாயக் கட்சியின் பிரமுகருமான ஒபாமா குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: இது எதேச்சையாக இடம்பெற்ற சம்பவம் அல்ல. அவ்வாறு நினைத்தால் அது எம்மை நாமே கேலிக்கு உள்ளாக்கும் செயல்தான். இந்த வன்முறை இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டுவந்த பொய்ப் பரப்புரைகளால் இடம்பெற்றது. சட்ட ரீதியில் இடம்பெற்ற தேர்தல் தொடர்பில் ட்ரம்பால் மேற்கொள்ளப்பட்ட பொய்ப் பரப்புரைதான் இந்த வன்முறைகளைத் தோற்றுவித்துள்ளது. இந்த உண்மையை குடியரசுக் கட்சியினரும் அவர்களின் ஆதரவு ஊடகங்களும் ஏற்கவில்லை - என்றார். (ம)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக முஸ்லிம் தலைவர்கள் முன்வரவில்லை

## மக்கள் சுட்டிக்காட்டு

**மன்னார், ஜன 8**

**முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்குத் தமிழ்த் தலைவர்கள் குரல் கொடுக்கும் போது அரசியல் கைதிகளின் விடுதலைக்காக முஸ்லிம் தலைவர்கள் குரல் கொடுக்காமல் இருப்பது ஏன்? இவ்வாறு வன்னி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.**

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; கொரோனா வைரஸால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிக்கக்கூடாது, முஸ்லிம் உறவுகளின் மத அனுஷ்டானங்களின் படி இறுதிக் கிரியைகள் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று முஸ்லிம் தலைமைகளை விட அதிகமாகத் தமிழ்த் தலைவர்களே குரல் கொடுத்து வருகிறார்கள். அது மட்டுமல்லாது இதற்காக நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டங்களில் அதிகமான தமிழ் மக்களே ஈடுபட்டும் வருகிறார்கள். இவ்வாறு இருக்க தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு எந்த ஒரு முஸ்லிம் தலைமைகளும் குரல் கொடுப்பதாகத் தெரியவில்லை. இன்று நாட்டில் போர் நிறைவுபெற்று 11 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. மனிதாபிமான அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று எந்த முஸ்லிம் தலைமைகளும் அரசிடம் கோரவில்லை இதை முஸ்லிம்கள் புரிந்துகொண்டு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக முஸ்லிம் தலைவர்களும், பொது மக்களும் மனிதாபிமான முறையில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் - என்றனர். (ப-213)

# பி.சி.ஆர் சோதனைக்கு உட்பட்டவர்களே பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவர்

*வவு.சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவிப்பு*

வவுனியா, ஜன.8

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களில் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் மட்டுமே பாடசாலைகளுக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்படுவர். ஏனையவர்கள் திருப்பி அனுப்படுவர் என்று வவுனியா வடக்கு சுகாதார மருத்துவ அதிகாரி வி.திலீபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது; வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு , புளியங்குளம் இந்துக்கல்லூரியில் பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெறுகின்றன. எனினும் இப் பரிசோதனைகளில் கலந்துகொள்ளும் ஆசிரியர்கள், அதிபர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. வெளிமாவட்டங்களிலிருந்து 150 ஆசிரியர்கள் கற்பித்தலுக்காக வருகின்ற போதிலும் நேற்று இடம்பெற்ற பரிசோதனைக்காக 34 ஆசிரியர்களே வருகை தந்திருந்தார்கள். இன்றும் குறித்த பரிசோதனை இடம்பெறவுள்ளதால் நேற்று வருகை தராதவர்கள் இன்று தவறாது கலந்துகொள்ள வேண்டும். பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொண்டு கொரோனா தொற்றில்லை என உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கையை வைத்திருப்பவர்கள் மாத்திரமே பாடசாலைகளுக்குள் சென்று கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் - என்றார். (ப-110)



# மாணவர்களுக்கு போசாக்கு உணவு

மட்டக்களப்பு, ஜன.8

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சால் பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆரம்ப பாடசாலையான வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 470 மாணவர்களுக்கு நேற்று போசாக்கு உணவுகள் வழங்கப்பட்டன. (ஐ)

# கொரோனா அவசர நிலையமாக வட்டு. தொழில்நுட்பக் கல்லூரி?

*நிர்வாகத்துடன் கலந்துரையாட முடிவு*

யாழ்ப்பாணம், ஜன.8

வட்டுக்கோட்டை-யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரியை கொரோனா அவசர நிலையத்துக்குப் பயன்படுத்துவதற்காக, கல்லூரி நிர்வாகத்துடன் கலந்துரையாடவுள்ளது என, யாழ் மாவட்ட கொரோனா ஒருங்கிணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கொரோனாத் தடுப்புத் தொடர்பில் ஆராயும் ஒருங்கிணைப்புக் குழுக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது யாழ். மாவட்டத்தில் கொரோனா நிலைமை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் தொடர்ச்சியாக தற்போதுள்ள நிலையைப் பேண முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள சந்தைகளை கொரோனாத் தாக்கத்தின் காரணமாக தற்போது மீளத் திறப்பது சாத்தியமில்லை எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தை மத்திய சுகாதார அமைச்சின் அனுமதியுடன் நடத்துவதா இல்லையா என விரைவில் முடிவெடுக்கப்படவுள்ளது என்றும் முடிவு எடுக்கப்பட்டது. கலந்துரையாடலில் யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், யாழ் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியும், மாவட்ட கொரோனா கட்டுப்பாட்டு அதிகாரியுமான மேஜர் ஜெனரல் செனரத் பண்டார, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், இராணுவ உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-20)

# அபிவிருத்தி திட்டங்களுக்கு 500 மில்லியன் அமெ. டொலர்

*கொரியா உடன்பாடு*

கொழும்பு, ஜன.8

2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் அபிவிருத்தித் திட்டங்களை நடை முறைப்படுத்துவதற்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்குவதற்கு கொரிய அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கிடையில் நிலவும் பொருளாதார புரிந்துணர்வை மேலும் வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும். 2017 ஆம் ஆண்டில் கொரியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட செயற்பாட்டு கட்டமைப்பு உடன்பாடு 2010 ஆம் ஆண்டில் நிறைவடைந்தது. இந் நிலையிலேயே குறித்த நிதி உதவியை வழங்க கொரிய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது. (ந-இ)

# மூன்றாம் கட்ட உதவிகள் அடுத்த வாரம் விநியோகம்

சாவகச்சேரி, ஜன. 8

தென்மராட்சி பிரதேசத்தில் புரேவிப்புயல் மற்றும் வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மூன்றாவது தொகுதியினருக்கான உலர் உணவுப் பொருள்கள் அடுத்த வாரம் விநியோகிக்கப்படவுள்ளன.

தென்மராட்சி பிரதேசத்தில் புயல் மற்றும் வெள்ளம் காரணமாக 2 ஆயிரத்து 963 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 994 பேர் பாதிக்கப்பட்டனர். (ஐ- 9)

# தனிமையிலுள்ள மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு

## வவு. நகரசபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டு

வவுனியா, ஜன.8

வவுனியா பட்டாணிச்சூரில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அந்தக் கிராமம் முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் அங்கு வசிக்கும் மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று வவுனியா நகரசபையின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்தின் நிலைமைகள் தொடர்பில் உறுப்பினர்களான அப்துல் பாரி மற்றும் லரீப் ஆகியோர் இது தொடர்பில் தெரிவித்ததாவது: எமது கிராமத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் திடீரெனத் தனிமைப்படுத்தப்பட்டனர். அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் அங்குள்ள 900 க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்டவர்கள் தற்போது உணவுத் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாதுள்ளனர். பிரதேச செயலகத்தின் எந்த அதிகாரிகளும் இந்த மக்களைப் பார்வையிடவில்லை. அவர்களுக்கான தேவைகள் குறித்தும் ஆராயவில்லை. குழந்தைகளுக்கான பால்மா மற்றும் வயோதிபர்களுக்கான உணவு, மருந்துவம் போன்றவற்றைப் பெறுவதில் பெரும் சிக்கல்கள் உள்ளன. எனவே தனிமைப்படுத்தப்பட்ட கிராமத்தைச் சேர்ந்த மக்களை மனிதாபிமானத்தோடு நோக்குங்கள் - என்றனர். (ஐ-110)

# 31ம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நினைவஞ்சலியும்



அமரர்

## விஜயலட்சுமி செல்வரத்தினம்

மலராக 18.08.1943 — சருகாக 10.12.2020


கடந்த 10.12.2020ல் எம்மை விட்டுப் பிரிந்து இறைபதம் நாடிய எங்கள் அன்பு அம்மாவின் 31ம் நாளான இந்நாளில் எல்லாம் வல்ல இறையின் பாதக் கமலங்களில் அவரது ஆத்மா நித்தியம் பெற வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

GPS விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## முருகேசு தர்மலிங்கம்

(ஓய்வு பெற்ற கிராம அலுவலர்)

மலேசியாவை பிறப்பிடமாகவும், காரைநகர் மொந்திபுலத்தை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு தர்மலிங்கம் நேற்று (07.01.2021)வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நகுலேஸ்வரியின் ஆருயிர்க் கணவரும், முரளிதரன், முரளிரூபன், முரளிராசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசதுரை (மலேசியா), பூபாலதுரை (காரைநகர்), சௌபாக்கியவதி (வவுனியா), செல்வராசா (கனடா), மற்றும் சந்திரசிவம் (கனடா), சங்கநிதி (கொழும்பு), சரஸ்வதி (காரைநகர்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.01.2021) வியாழக்கிழமை பிற்பகல் 5.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மொந்திபுலம்,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

# திருகோணமலை வங்கி ஊழியருக்கு கொரோனா

திருகோணமலை நகரில் உள்ள தனியார் வங்கி ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அவர் வசிக்கும் தம்பலகாமம் பிரதேசத்தில் நடத்தப்பட்ட அன்டி.ஜென் பரிசோதனையின்போது தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதனையடுத்து குறித்த வங்கி மூடப்பட்டது அங்கு கடமை புரியும் 10 ஊழியர்களுக்கு அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அன்டி.ஜென் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை. பி.சி.ஆர். முடிவுகள் இன்று வெளியாகவுள்ளன.

(தஇ)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரம்பப் பிரிவு தனியார் கல்வி நிலையத்திற்கு வீட்டிற்கு வந்து தமிழ் Typing செய்யக்கூடிய (பெண்) வேலையாள் தேவை.

077 774 2942

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## பகவதிப்பிள்ளை தர்மலிங்கம்

(ஓய்வு பெற்ற ஆயுள்வேத வைத்தியர்)

அவர்கள் 01.01.2021 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி யடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விநாயகர் களஞ்சியம்
இலுப்பையடி வீதி, மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

# மரண அறிவித்தல்



## மார்க்கண்டு சந்திராதேவி (தேவி)

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

தவசிகுளம், மிருசுவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சந்திராதேவி நேற்று (07.01.2021) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் கிருஸ்ணன் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், சர்மிளன், சேனுஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரமேஸ்வரி, புவனேஸ்வரி, விமலேஸ்வரி, ஜெகதீஸ்வரி, நித்தியானந்தம், சச்சிதானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தசாமி, ஆனந்தம், குணம், இராசதுரை, செல்வம், லதா, பவானி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2021) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தவசிகுளம், மிருசுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

## கொரோனாவால். மேலும் மூவர் காவு


நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்தது.

இவர்களுடன் சேர்த்து, இதுவரை நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 222 ஆக அதிகரித்துள்ளது.

பேருவளையைச் சேர்ந்த 62 வயதுடைய ஆண் ஒருவரும், கொழும்பு 14ஐச் சேர்ந்த 89 வயது ஆண் ஒருவரும், மீதிரிகலவைச் சேர்ந்த 53 வயது ஆண் ஒருவருமே கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-22)

# கண்ணீர் அஞ்சலி



பாசத்திற்கும் மதிப்புக்குமுரிய எமது தந்தையின் நண்பருமான

அமரர்

## வேலுப்பிள்ளை செல்லத்துரை

அவர்கள் காலமானதையிட்டு மிகுந்த கவலையடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

பஞ்சாச்சரம் குடும்பமும்,
சாரங்கா நகைமாடம் (சிவா),
பணியாளர்களும்.

# வலிகாமம் மேற்குபிரதேசசபை , சுழிபுரம்.
## கடைகளைவாடகைக்குவழங்குதல் - 2021

வலிகாமம் மேற்கு பிரதேசசபையினால் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கடைகளை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடுசெய்யப்பட்ட மாதாந்த வாடகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் குறைந்த ஒரேமுறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது.

| தொ. இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | மீளளிக்க முடியாத கேள்விப்படிக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | சங்கானை சந்தை உட்புறக் கடைத்தொகுதி இல.-13 | 960,000.00 | 19,200.00 | 1000.00 |
| 02 | சங்கானை சந்தை உட்புறக்கடைத் தொகுதி இல. - 23 | 960,000.00 | 19,200.00 | 1000.00 |
| 03 | சங்கானை சந்தை மேல்மாடிக் கடைத் தொகுதி இல. - 01 | 675,000.00 | 13,500.00 | 1000.00 |
| 04 | சங்கானை சந்தை மேல்மாடிக் கடைத் தொகுதி இல. - 02 | 675,000.00 | 13,500.00 | 1000.00 |
| 05 | சங்கானை சந்தை மேல்மாடிக் கடைத் தொகுதி இல. - 03 | 675,000.00 | 13,500.00 | 1000.00 |
| 06 | சங்கானை சந்தை மேல்மாடிக் கடைத் தொகுதி இல. - 04 | 675,000.00 | 13,500.00 | 1000.00 |
| 07 | சங்கானை சந்தை மேல்மாடிக் கடைத் தொகுதி இல. - 05 | 675,000.00 | 13,500.00 | 1000.00 |
| 08 | சங்கானை சந்தை மேல்மாடிக் கடைத் தொகுதி இல. - 06 | 675,000.00 | 13,500.00 | 1000.00 |
| 09 | சங்கானை சந்தை மேல்மாடிக் கடைத் தொகுதி இல. - 07 | 675,000.00 | 13,500.00 | 1000.00 |
| 10 | வட்டுக்கோட்டை நவீன சந்தைக்கடை இல-01 | 252,000.00 | 5,040.00 | 1000.00 |
| 11 | சங்கரத்தை சந்தைக்கடை இல - 04 | 630,000.00 | 12,600.00 | 1000.00 |
| 12 | சுழிபுரம் சத்தியகாட்டுசந்தைகடை இல.-01 | 603,000.00 | 12,060.00 | 1000.00 |
| 13 | சுழிபுரம் சத்தியகாட்டுசந்தைகடை இல.-02 | 603,000.00 | 12,060.00 | 1000.00 |

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி :- 2021.01.08 - 2021.01.22 மதியம் 12.00 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 2021.01.25 பி.ப 02.00மணிவரை
கேள்விப்படிவம் திறக்கப்படும் திகதி :- 2021.01.25 பி.ப 02.30 மணி

**நிபந்தனைகள்**

1. அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம், மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணங்கள், ஆகியவற்றைப் பணமாக செலுத்தி ஆளடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2021.01.08ஆம் திகதியில் இருந்து 2021.01.22 ஆம் திகதிவரை ஒரேமுறையில் செலுத்தக்கூடியதொகைக்கானகேள்விப்படிவம் இணைப் பிரதிகளில் பெற்று 2021.01.25 ஆம் திகதிபி.ப 02.00 மணிக்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. அலுவலகத்தில் இணைப்பிரதிகளில் வழங்கப்படும் கேள்விப்படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும். அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் படிவங்களில் விண்ணப்பதாரர் எவ்விதமான மாற்றங்களும் செய்தல் ஆகாது.
3. படிவத்தை பூரணப்படுத்துவதில் ஏற்படும் திருத்தங்களில் விண்ணப்பதாரரால் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
4. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியை "தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்" என முகவரியிட்டு கேள்வியடங்கிய கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படலாம் அல்லது அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடலாம். மற்றைய இணைப் பிரதியை "பிராந்திய உள் ஞராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ஞராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
5. 2021.01.25ஆம் திகதி நண்பகல் 02.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் மட்டும் அன்று பி.ப 02.30 மணிக்கு கேள்விச் சபையின் முன்னிலையில் திறக்கப்படும். விண்ணப்பதாரர் அல்லது அவரின் எழுத்து மூல அதிகாரம் பெற்ற பிரதிநிதி அவ்வேளையில் சமூகமளிக்கலாம்.
6. 2021.01.25.ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு பின்னர் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
7. ஒரு விண்ணப்பப்படிவத்தில் ஒருகடைக்கு மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் உரிய முறையில் சபையில் பெற்றுவிண்ணப்பிக்கலாம்.
8. அரச நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் இக்கேள்வி நடைமுறைக்கமைவாக விண்ணப்பிக்கலாம்.
9. எக்கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
10. கேள்விதாரர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் தான் வதியும் இடத்தின் கிராம அலுவலகரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடச்சான்றிதழ், மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதி சமர்ப்பித்தல் வேண்டும்.
11. கடந்த காலங்களில் தவறுநர் பட்டயலில் (Defaulters list) அட்டவணைப் படுத்தப்பட்டோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகையாக, வரியாக நிலுவையில் உள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் கேள்வி நிராகரிக்கப்பட்டு செலுத்திய வைப்புப்பணம் அரச உடமையாக்கப்படும். பிரதேசசபையுடனான சகல எழுத்து மூல, வாய்மூல தொடர்பாடல்கள் யாவும் குத்தகைக்காரராலேயே மேற்கொள்ளப்படவேண்டும். அவரது பிரதிநிதி ஏற்றுக் கொள்ளப்படமாட்டார்.
12. கேள்விகாரரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகைகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயத் தொகையைக் காட்டிலும் அதிகரித்ததாயிருத்தல் வேண்டும். ஆகக் கூடியகேள்வித்தொகை ஏற்றுக்கொள்ளப்படும்.
13. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விக்காரர் தமது கேள்வித்தொகையினை ஒரே தடவையில் 2021.02.01 ஆம் திகதிக்கு முன்னர் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் வட்டுக்கோட்டை, சங்கானை, சுழிபுரம் உப அலுவலகங்களில் செலுத்துதல் வேண்டும்.
14. வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலைமதிப் பீட்டுத் திணைக்களம் மதிப்பிட்ட கடைக்கான மாதாந்த வாடகையை பணமாக மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.
காலத்திற்கு காலம் அரசகொள்கைகளுக்கமைய வரிவிதிப்புக்கள் ஏதேனும் இருப்பின் அதனை செலுத்துதல் வேண்டும்.
15. மாதாந்த வாடகைப் பணத்தை அந்த மாதம் இறுதிவேலை நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாக மேலதிகமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகைப்பணத்தினை செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்தச் செய்யப்படும்.
16. முற்குறிப்பிடப்பட்ட 14ஆவது 15ஆவது நிபந்தனைப் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
17. தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
18. குத்தகையாளர் தான் நடாத்தும் தொழிலின் அல்லது வியாபாரத்தின் வருடாந்த உத்தரவுக் கட்டணத்தை வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் தொகைகுறித்து அறிவிக்கப்பட்டதும் குறித்த காலத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
19. வாடகைக்கு கொடுப்பவர் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒரு முறையும் அல்லது தேவையேற்படின் காலத்திற்கு காலம் வாடகையை மீள் பரிசீலனை செய்வதற்கு அத்தொகையை அறவீடு செய்வதற்கும் பூரண அதிகார முள்ளவராயிருக்கின்றார். அதற்கு வாடகைக்காரர் மறுப்புதெரிவிக்கமுடியாது.
20. குத்தகைக்குப் பெற்ற கடையின் மின்சார இணைப்புக் கட்டணங்கள் மற்றும் மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.
21. கடையை வேறு ஒருவருக்கும் சாட்டுதல் செய்யவோ அல்லது உப வாடகைக்கு வழங்கவோ இயலாது. அவ்வாறு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருத்தல் தொடர்பாக சபையினால் கண்டுபிடிக்கப்படின் எந்த ஒரு அறிவித்தலும் இன்றி கடை மீளப்பெறப்படும்.
22. கேள்வித் திகதிக்கு முந்திய ஐந்து வருட காலத்திற்குள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச் செயல்களுக்காக நீதி மன்றத்தினால் தண்டிக்கப்பட்ட ஒருவர் எந்தக் கடைக்கும் கேள்விகள் சமர்ப்பிப்பதற்கு அருகதையற்றவராவார்.
   - ★ மிகை இலாபம் ஈட்டியகுற்றம்.
   - ★ நிறுத்தல் முகத்தலளவைக் கட்டளைச் சட்டத்தை மீறிய குற்றம்.
   - ★ சந்தை உபவிதிகளை மீறிய குற்றம்.
23. உள்ஞராட்சி மன்றங்களுக்கு சொந்தமான சந்தைக் கடைகளை குத்தகைக்கு விடுதல் தொடர்பான1980/40ம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.
24. கடைத் தொகுதியின் உட்புறக் கடைகள் சாப்பாட்டுக்கடைகள், தேனீர் கடைகள், ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பானக் வகைகள் சந்தையில் வியாபாரம் செய்யும் பொருட்கள் போன்றவியாபாரங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
25. சித்திபெற்ற கேள்விதாரர் குறித்த காலத்தில் கட்டுப்பணம் செலுத்தத் தவறின் எந்தவித அறிவித்தலுமின்றி கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படாது சபை நிதிக்குமாற்றப்படும்.

மேலதிக விபரங்களை அலுவலகநாட்களில் கடமை நேரத்தில்தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

த.நடனேந்திரன்,
தவிசாளர்,
உள்ளுர் அதிகாரபெறுகைச் சபை,
வலிகாமம் மேற்குபிரதேசசபை,
சுழிபுரம்.
08.01.2021

## இணக்க சபைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கொரோனாவால் இடைநிறுத்தப்பட்டிருந்த இணக்க சபை அமர்வுகள் நாளை சனிக்கிழமை தொடக்கம் நடைபெறும் என்று குறித்த மாவட்டங்களின் இணக்கசபை பயிற்றுவிப்பாளரும் இணைப்பாளருமான ரி. சனாதனசர்மா தெரிவித்துள்ளார். (து-39)

**Pharmacist தேவை**

மருந்தகம் ஒன்றிற்கு மருந்தாளர் (Pharmacist) தேவை.

தொடர்புகளுக்கு:
070 185 6968

**மணமகள் தேவை**

மிகவும் உயர் பதவியிலுள்ள கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சிம்மராசி 9 இல் செவ்வாய் மணமகனுக்கு பொருத்தமான படித்த அழகிய மணமகள் தேவை.

077 397 1841, 077 891 3745

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
**திருமதி பிரியதர்ஷினி அங்குசன்**
அவர்களின் பாசமிகு மாமியார்
**திருமதி பகவதிப்பிள்ளை தர்மலிங்கம்**
அவர்கள் 01.01.2021 அன்று இறைபதமடைந்தார்.
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சேவையாளர்கள் சங்கம்**
**யா/ மகளிர் கல்லூரி, சாவகச்சேரி**

## பொது அறிவித்தல்
## மன்னார் பிரதேச சபை

வட மாகாணம் மன்னார் மாவட்டம் மன்னார் கிழக்கு மன்னார் பிரதேச செயலாளர் பிரிவு மன்னார் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தோட்டவெளி (மன்/62) கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட தோட்டவெளியில் அமைந்துள்ள நன்கு பிரித்து வரையறுக்கப்பட்ட மன்னார் பிரதேச சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 'வண்ணான்கூடல்' என்ற காணியில். இதன் விசாலம் கிழக்கு மேற்காக இருநூற்றி அறுபது (260) அடி வடக்குத் தெற்காக ஐம்பது (50) அடியைக் கொண்ட இக்குறித்த காணியில் பொதுமயானம் அமைப்பதென மன்னார் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே இவ்விடயத்தில் ஏதேனும் ஆட்சேபனைகளிருப்பின் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலமாக தமது ஆட்சேபனைகளை தவிசாளர், மன்னார் பிரதேச சபை, தலைமன்னார் வீதி, காட்டாஸ்பத்திரி, பேசாலை என்ற முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**மன்னார் பிரதேசசபை,**
**காட்டாஸ்பத்திரி பேசாலை.**

## 27 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 22 . 08 . 1937



சிவபதம் 06 . 01 . 1994

**அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்**
(அம்பிகா டிஸ்பென்சறி - சாவகச்சேரி )
*திதி: மார்கழி அபரபக்க தசமி*

எங்கள் குடும்பத் தலைவரே
நீங்கள் வாழ்ந்த பாதையில்
நாங்கள் என்றும் வாழ்வோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய நுணுவில் சிதம்பர
விநாயகர் பாதங்களை வணங்குகிறோம்.

சாந்தி

அம்பிகா டிஸ்பென்சறி
சாவகச்சேரி,


**குடும்பத்தினர்,**
சாசாலை வடக்கு,
சாவகச்சேரி.

# 6ஆம் மாத வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## திரு. நமசிவாயம் டயஸ்

மலர்வு 19.06.1994
உதிர்வு 16.06.2020



### மீண்டும் பிறந்து விடு.........

குதூகலமாய் சிரித்திருந்தோம்.
ஒரு தட்டில் உணவுண்டோம்.
ஒரு பாயில் படுத்துறங்கினோம்.
விளையாட்டாய் சண்டையிட்டோம்.
வசதிகளேதுமற்ற போதும்,
சந்தோச வாழ்வு வாழ்ந்தோம்.
அப்பாவின் செல்ல மகவும் நீதானே.
சொர்க்கத்தில் அவரைப் பார்க்கவா சென்றாய்?
"தம்பியுடையான் படைக்கஞ்சான்" - என்று
பெருமை கொண்டது தான்
அண்ணன்மார் எம் தவறா?
கதாநாயகனாய், கம்பீரமாய் - நீ வலம் வந்தபோது,
கனவுகள் பல அக்காமார் நாம் கண்டிருந்தோமே.
எம் சின்னத் தம்பி நீ ஆஜானுபாகுவாய்
அழகாய் தலை நிமிர்ந்தனையே - உன் பெருவாழ்வை
கனவாய் நாம் வரித்திருந்தோமே.
தாய்மாமன் பாசத்திற்கு மருமக்கள் ஏங்கிட,
சின்ன மகனோ சித்தப்பா வரவு நோக்கிட,
இடியாய் வந்த செய்தி பொய்யாகிப் போகாதோ ஐயா!
நிறை வாழ்வு நீ வாழ - மெழுகுதிரியாய்
நாம் உருகி செய்த தியாகங்கள் பயனின்றி போனதுவே.
என் கடைக்குட்டி "பொலீஸ்"" என்று பெருமையாய்
சொல்லித் திரிந்தாரே எம் அம்மா.
ஒற்றையாளாய் எமை ஆளாக்க - அம்மா பட்ட
துயர்கள் சவால்கள் அர்த்தமின்றி போயிற்றே.
இப்போதானே வாழ்வில் அம்மா நிம்மதி கொண்டார்.
ஏனையா பறித்துச் சென்றாய்? - தேற்ற வழியின்றி தேம்பியழுகின்றோம்
எல்லாமும் தந்து அப்பாவாய், அண்ணன் நான் அரவணைத்தேனே,
சொல்லாமல் ஏனடா நெடுவழி சென்றாயப்பு.
எனை மாய்த்து உன் ஆசையெல்லாம் நான் நிறைவேற்றியிருப்பேனேயடா.
ஆறவில்லையடா எம் மனது - அழுதழுது கண்ணீரும் வற்றிவிட்டது.
எல்லா வசதிகளுமிருந்தும் - விரக்தியின் விளிம்பில்
ஜடமாய் வாழ்கின்றோம்.
தங்கமே, எங்கள் செல்லத் தம்பியே!
உன் செல்லப் புன்சிரிப்பும், செல்லக் குறும்புகளும்
யாரைத்தான் கவராது, தூக்கமின்றி தவிக்கின்றோம்.
எங்கள் சந்தோசமே நீதானே ஐயா!
மீண்டும் பிறப்புண்டேல்,
எம் செல்ல மகனாய் பிறந்து விடு.
எம் உயிருடன் கலந்து விடு.

கடந்த 16.06.2020 அன்று மீளாத்துயில் அடைந்த எம் அன்புச் செல்வத்தின் மரணச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசியிலும், சமூகவலைத்தளங்களிலும், பத்திரிகை, பதாதைகள் மூலமும் அனுதாபம் தெரிவித்த உறவினர்கள், நண்பர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்து நல்லுள்ளங்களிற்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.01.2021) வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (09.01.2021) சனிக்கிழமை மு.ப. 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தயவுசெய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**மீசாலை வடக்கு,**
**வேம்பிராய், கொடிகாமம்.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி பூரணம் சின்னமணி

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் இராச வீதி, கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் சின்னமணி நேற்று (07.01.2021) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் சின்னமணியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னட்டி நாகமுத்து ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் குழந்தை ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான ராசா, தம்பையா, தங்கரத்தின் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான உமையாத்தை, லீலாவதி மற்றும் கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், மல்லிகாதேவி, மகேந்திரராசா, விமலாவதி, சந்திரவதி, மனோகரராசா (தபால் உத்தியோகத்தர்-யாழ்ப்பாண பிரதம தபாலகம்), பூலோகவதி, காலஞ்சென்ற தருமராசா மற்றும் நிரஞ்சினிதேவி (M.P.C.S-நீர்வேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், துரைவீரசிங்கம், விஜயராணி (சாவகச்சேரி நீதிமன்றம்) கிருஷ்ணமூர்த்தி, தியாகராசா, கமலேஸ்வரி, நவரத்தினகுமார், பகீரதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ரேணுகா-சர்மிலன், கோவிந்தராசன்-தர்சிஜா, லட்ஷினி, நிதர்சன், மதுசா, சகானா, டிஷாயினி, கயறூபி, லதுசன், டினோசா, கவிராஜ், லதுஷிகா, சாதனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் டிஷாந், விபிஷாந், ஜஸ்மிகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2021) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கோப்பாய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
14 . 09 . 1935



இறப்பு
22 . 12 . 2019

அமரர் திருமதி

### தில்லையம்பலம் அன்னபூரணம் (பேபி)

திதி . 09.01.2021

நேற்று நிகழ்ந்தது போலிருக்கின்றது
காற்றாய் பறந்தது ஆண்டு ஒன்று உங்கள் நினைவுகள் என்றும்
எங்களுடன் நிலைத்திருக்கும் கண்ணியமாய் வளர்த்து வாழ
வழி வகுத்து வையத்துள் நாம் நல்வாழ்வு வாழ
வழிகாட்டிய எம் அன்புத் தெய்வம் அம்மா அழியா உங்கள்
நினைவுகளுடன் வாழும் நாம்

190 / 2 A, குளவீதி,
பட்டக்காடு,
வவுனியா.

தில்லையம்பலம்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 02 . 1983



மறைவு
06 . 01 . 2021

### கணபதிப்பிள்ளை ஜனாதீபன்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் யாழ். பல்கலைக்கழகம)

நெடுந்தீவு 12 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை ஜனாதீபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் யாழ். பல்கலைக்கழகம்) (06.01.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கணபதிப்பிள்ளை (ஓய்வுநிலை C.T.B திடீர் பரிசோதகர்) - மேரிசறோஜா (ஓய்வுநிலை அதிபர்) தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - செங்கமலம், காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை (ஓய்வு நிலை அதிபர்) மற்றும் அருள்மேரியின் அன்புப் பேரனும், சுதர்சினி (யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்), ஜெயதீபன் (மருத்துவ ஆய்வாளர் - லண்டன்), நவதீபன் (லண்டன்), துஷ்யந்தினி (கணக்காளர் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், வில்சன் (லண்டன்), ரமணன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், ரிஷிகாந், கௌசில்காந், நெனிக்கா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், ஆதீஸ், ஓமேஸ், வைஷ்ணவியின் சித்தப்பாவும், காலஞ்சென்ற அன்னமலர் (ஓய்வுநிலை ஆசிரியர்) மற்றும் அன்னபாக்கியம் (ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர்), குணரத்தினம் (ஓய்வுநிலை கணக்காளர்) ஆகியோரின் பெறாமகனும், அருளானந்தம் (ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்), மரியநாயகம் (ஓய்வுநிலை தபாலதிபர்), சேவியர் தனிநாயகம் (U.S.A) அன்ரன் திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (07.01.2021) வியாழக்கிழமை நெடுந்தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு நெடுந்தீவு இல்லத்திலிருந்து இன்று (08.01.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் புனித சவேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து காட்டு ராமன் சல்லி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

12 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு.

தகவல்.
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

மண்ணில்
21 . 04 . 1937



விண்ணில்
03 . 01 . 2021

### திருமதி மாகிறேற் சூசைப்பிள்ளை (றூபி)

(முன்னாள் ஆசிரியை, யாழ்ப்பாணம் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மாகிறேற் சூசைப்பிள்ளை அவர்கள் 03-01-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு மரியம்மா (செல்லம்மா) தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பிலிப்பு ஆனாள் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிலிப்பு சூசைப்பிள்ளை (முன்னாள் ஆசிரியர் - அனுராதபுரம் சென் ஜோசப் கல்லூரி, யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு துணைவியும், பிலிப் கலிஸ்ரஸ் (பிரான்ஸ்), யூட் கமிலஸ் (பிரான்ஸ்), டியோ கிளேற்றஸ் (பிரான்ஸ்), லொய்ஸ் கனிஷியா (கனடா), ஈனஸ் கிருசாந்தா (பிரான்ஸ்), டொறிஸ் கமிலா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ரெஜினா (டெய்சி), பிலோமினா (பேபி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஐடா மாறி, மரின் பெனிற்றா, ஜெயசீலி, கொட்வின் சாந்தன், விவேகரமணன், ஜோ மதனராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், செபமாலையம்மா (ராசாத்தியம்மா), காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை (ஐயா), சின்னத்துரை, செபஸ்ரியாம்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம், வன்னமணி ஆகியோரின் அன்புச் சகலியும், யுடிந்தா, லுசிந்தா, யூட் கசியஸ், கிளைட் கனிசியஸ் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், கிளறிஷா, கஸ்ரோன், புளோரியன், ஏஞ்சலின், பெனோவா, கமிலின், ஜெரோம், டிரோன், டியோலின், மிஷல், ஏற்றியன், ஜெரமி, ஹர்ஷன், நகிர்ஷன், கிறிஸ்ரன், பேபியன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 08.01.2021 (வெள்ளி) இரவு 7.00 - 9.00 மணி வரையும், 09.01.2021 சனிக்கிழமை காலை 7.00 - 9.00 மணி வரையும் Chapel Ridge Funeral Home & Cremation Centre, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada இல் அஞ்சலிக்காக வைக்கப்படும். தொடர்ந்து 09.01.2021 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் St. Thomas the Apostle Roman Catholic Church, 14 Highgate Drive, Markham, ON L3R 3R6, Canada இல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, காலை 11.30 மணியளவில் Christ the King Catholic Cemetery, 7770 Steeles Ave E, Markham, ON L6B 1A8, Canada இல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிலிப் கலிஸ்ரஸ் | (மகன்) | +33660501656 | டொறிஸ் கமிலா | (மகள்) | +14167250506 |
| யூட் கமிலஸ் | (மகன்) | +33609613962 | கொட்வின் சாந்தன் | (மருமகன்) | +16479994138 |
| டியோ கிளேற்றஸ் | (மகன்) | +33651907880 | விவேகரமணன் | (மருமகன்) | +33624039679 |
| லொய்ஸ் கனிஷியா | (மகள்) | +16476887336 | ஜோ மதனராஜா | (மருமகன்) | +16479371937 |
| ஈனஸ் கிருஷாந்தா | (மகள்) | +33695454893 | | | |

## பிணை கோரி...

தொடர்பாகவும் தனது உடல் நிலை தொடர்பாகவும் குறிப்பிட்டு கடந்த டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி சிறைச்சாலை ஆணையாளருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

அத்துடன் தான் நிரபராதி என நிரூபிக்கும் வாய்ப்பும்,மேலதிக வைத்திய சிகிச்சையும் இல்லாமல் தான் தொடர்ந்தும் சிறைக்குள் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார் என்று அவருடைய உறவுகள் 'குரலற்றவர்களின் குரல்' அமைப்புக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். (த-இ)

## உதயன்...

புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் ஒளிப்படம் மற்றும் சொற்களைப் பிரசுரித்தமைக்காக யாழ்ப்பாணம் பொலிஸாரால் உதயன் பத்திரிகைமீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1978ஆம் ஆண்டு இல.23 நீதிமன்றக் கட்டளைச் சட்டத்தின் 55(1) பிரிவின் கீழும் இலங்கைத் தண்டனைச் சட்டக் கோவை 120ஆம் பிரிவின் கீழும் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட அமைப்பை புத்துயிர் பெறும் வகையில் செயற்பட்டமை, மக்கள் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தி மீண்டும் போர் நடவடிக்கைகள் ஏற்படக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியமை, போன்ற குற்றச்சாட்டுக்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பான அழைப்புக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி கடந்த ஆண்டுகளைப் போன்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் படத்துடன் கூடிய செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அந்தச் செய்தி தொடர்பாகவே யாழ்ப்பாணம் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிங்கள, ஆங்கில, தமிழ் ஊடகங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் ஒளிப்படத்துடன் கூடிய செய்திகள் வெளியாகிவரும் நிலையில், உதயன் பத்திரிகையை மட்டும் இலக்குவைத்து தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு, தமிழ் மக்களுக்கான குரலை நசுக்கும் செயல் என்றும், ஊடக அடக்குமுறை என்றும் அரசியல் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் , பொது அமைப்புகள் எனப் பல தரப்பினரும் கண்டனம் தெரிவித்துவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-1)

## வடக்கு...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், இந்திய வெளிவிகார அமைச்சருக்கும் இடையே நேற்றுக் கொழும்பில் நடந்த சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்த வரைபைக் கையளித்தார்.

இந்தச் சந்திப்பில் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது என்று சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையளித்துள்ள 21 பக்க யோசனைத் திட்ட வரைபில், "புதிய அரசமைப்பில் மத்திய மற்றும் பிராந்தியங்களின் ஐக்கியத்தைக் கொண்டதாக அரசு முறைமை அமைய வேண்டும். அதில் ஒரு பிராந்தியமாக தமிழ் பேசும் மக்களின் பிரதான வாழிடமான வடக்கு கிழக்கு இருத்தல் வேண்டும். ஒரு மக்கள் கூட்டத்துக்கு உள்ளக சுயநிர்ணய உரிமை தொடர்ந்து மறுக்கப்படுமானால் அவர்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் வெளிப்புற சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதை நினைவுபடுத்துகின்றோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-22)

## புலிகளின்....

ளின் தயாரிப்பான சக்தி வாய்ந்த கிளைமோர் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று சுழிபுரம் மத்தியில் உள்ள தனது காணியைத் துப்பரவாக்கிய உரிமையாளர் கிளைமோரைக் கண்டுள்ளார். உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் கிளைமோர் குண்டு மீட்கப்பட்டது. அந்தக் காணியில் இனங்காணப்பட்ட மேலும் ஒரு தொகுதி வெடிபொருள்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.(ஒ,26)

## மாகாண....

வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இலங்கை அரசுக்கு அழுத்தமாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நேற்று நடந்த சந்திப்பில் எஸ்.ஜெய்சங்கர் இந்த விடயத்தைத் தெளிவுபடுத்திள்ளார்.

இந்தியாவினதும், இலங்கையினதும் இணக்கப்பாட்டுடன் உருவாக்கப்பட்ட அரசமைப்பின் 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். இதை இலங்கை அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளேன் என்றும் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஜெனிவாவில் ஒன்றுபட்டுக் குரல் கொடுப்பதற்காக 3 தமிழ்க் கட்சிகள் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளமை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தச் சந்தர்ப்பத்தில் எஸ்.ஜெயசங்கருக்கு தெரியப்படுத்தியுள்ளது. (எ-22)

## ஒரணியாக...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவை நேற்றுக் காலை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் ஜெய்சங்கர் சந்தித்தார். இந்திய வெளிவிவகார அமைச்சருடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவும் கலந்து கொண்டார். சுமார் ஒரு மணி நேரம் இந்தச் சந்திப்பு நடந்தது.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி), நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஒருமித்த நாட்டுக்குள் தமிழர்கள் தீர்வு கேட்கின்றார்கள். அவர்களின் அபிலாஷைகளான நீதி, சமாதானம், சமத்துவம், கௌரவம் உள்ளடங்கலான தீர்வைப் பெற்றுக்கொடுப்பது இலங்கை அரசின் பிரதான கடமை என்பதை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடனான சந்திப்பில் எடுத்துரைத்துள்ளேன்.

வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கு இந்தியா தொடர்ந்து உதவிகளைச் செய்யும். போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நலனில் இந்தியா அதிக சிரத்தை கொண்டுள்ளது.

பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சை ஆரம்பித்துள்ளோம். அவற்றின் இயக்கம் தொடர முழுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஜெய்சங்கர் இந்தச் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம் தமிழர்கள் பிரதிநிதிகள் அல்ல என்று இலங்கை அரசு இந்திய வெளிவிகார அமைச்சரிடம் நேரடியாக கூறியுள்ளது. அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து தெரிவான அரச தரப்பின் தமிழ் பிரதிநிதிகளையும் ஜெய்சங்கரைச் சந்திக்க ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது. இந்த விடயத்தையும் கூட்டமைப்புடனான சந்திப்பில் இந்தியத் தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஒ-5,22)

## வடக்கில்...

மனை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் மருத்துவபீட ஆய்வு கூடம் என்பவற்றில் நேற்று 686 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 12 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்று தொற்று இனங்காணப்பட்ட ஒருவர் மருத்துவ பீட மாணவராவார்.

வெளிநாடு செல்வதற்காகக் கொழும்பு சென்று, அங்கிருந்து திரும்பிய பூநகரியைச் சேர்ந்த 7 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து இவர்களுடன் திரும்பிய 3 பேருக்கு ஏற்கனவே தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்து.

மருதங்கேணியைச் சேர்ந்த இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் கொழும்பில் இருந்து வந்த நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சண்டிலிப்பாய் மற்றும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் மருதனார்மடம் கொரோனாக் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டவர்கள். (எ-26)

## இந்தியாவின்...

தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்களும், இன்று எம்முடன் அவர் பேசிய விடயங்களும் ஒன்றாகவே உள்ளன. இந்தக் கருத்துக்கள் எமக்கு நம்பிக்கை மிகுந்தவையாக உள்ளன.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். இந்திய வெளிவிகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையே கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் நேற்றுக் காலை சந்திப்பு நடைபெற்றது.

அந்தச் சந்திப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

பிறந்துள்ள புதுவருடத்தில் மிகவும் முக்கியம் வாய்ந்த சந்திப்பாக இது இருந்தது. இது எமக்கு மிகவும் நம்பிக்கை மிகுந்த திருப்திமிக்க சந்திப்பாகவும் உள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கை விவகாரங்களில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்தவர். இங்குள்ள நிலைமைகளை ஆழமாக அறிந்தவர்.

மாகாண சபை முறைமைகள், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் புதிய அரசமைப்பு வரைபு மற்றும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவருடன் கலந்துரையாடினோம்.

அவர் எமக்கு அளித்த பதில்கள் நம்பிக்கை மிகுந்தவையாக உள்ளன. புதிய அரசமைப்பு மற்றும் அரசியல் தீர்வு விடயங்களில் நாம் கொண்டுள்ள நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் அவர் நேரில் எடுத்துரைப்பார். இது தொடர்பில் அவர் எமக்கு வாக்குறுதியும் தந்துள்ளார். தீர்வு விடயம் மற்றும் தமிழர் விவகாரம் தொடர்பில் இந்தியாவுடனான எமது பேச்சுகள் தொடரும் என்றார். (எ-22)

## யாழ்ப்பாண....

செய்யப்பட்டுள்ளது.

மாத்தளையைச் சேர்ந்த இந்த மாணவன் இங்கு அறையில் தங்கிக் கற்கின்றார். இவர் விடுமுறைக்காக மாத்தளை சென்று கடந்த 26ஆம் திகதி பஸ்ஸில் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார்.

இவர் விடுமுறையில் சென்றிருந்த சமயம் அங்கு மரண வீடொன்றுக்குத் தாயாருடன் சென்றிருக்கின்றார். அதன்பின்னர் அவர் யாழ்ப்பாணம்திரும்பியுள்ளார். அவரது தாயாருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று மாத்தளையில் உறுதிப்படுத்தப்பட்டது. அதையடுத்து உடனடியாக நேற்று மாணவனிடம் மாதிரி பெறப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் அவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அந்த மாணவர் உணவு வாங்கச் சென்ற உணவகம் ஒன்று ஆனைப்பந்திப் பகுதியில் மூடப்பட்டது. அங்கு பணியாற்றியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மருத்துபீட மாணவர்கள் நால்வருடன், தொற்றாளர் நெருக்கமான தொடர்பைப் பேணியுள்ளார். அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர் நடமாடிய இடங்கள் தொடர்பாக சுகாதாரப் பிரிவினர் விசாரித்து வருகின்றனர். அதற்கமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ-26)

## உயிரிழந்த...

துவமனையில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் கடந்த மூன்று நாள்களாக கிசிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவர் கிளிநொச்சி நகர பிள்ளையார் ஆலயம், வங்கிகளுக்கு முன்பாக நின்று யாசகம் பெற்று வந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவரது உறவினர்களைக் கண்டறியமுடியாத நிலையில் சடலம் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. அவரது உடமைகள் ஆராயப்பட்டபோது, அவரிடம் இருந்த பழைய பைகளில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ஐ-214)

## இந்திய....

கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறைக் கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரே மீனவர்களைக் கைது செய்துள்ளனர். அவர்களின் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறைக் கடற்படை முகாமுக்கு நேற்றுக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் இன்று கடற்றொழில் நீரியல்துறை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

# வீடு திரும்பினார் கங்குலி

புதுடில்லி, ஜன.8
கொல்கத்தா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இந்திய கிரிக்கெட் சபைத் தலைவரும், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவருமான சௌரவ் கங்குலி நேற்று முன்தினம் வீடு திரும்பியுள்ளார்.

சௌரவ் கங்குலிக்கு கடந்த 2ஆம் திகதி லேசான நெஞ்சுவலி ஏற்பட்டதை அடுத்து, கொல்கத்தாவில் உள்ள உட்லேண்ட்ஸ் மருத்துமனையில் சேர்க்கப்பட்டார். பரிசோதனையில் அவருக்கு இதயத்தில் உள்ள 3 தமனிகளில் அடைப்பு இருந்தது தெரியவந்தது. அதில் ஒரு அடைப்பு ஸ்டென்ட் குழாய் பொருத்தப்பட்டு அகற்றப்பட்டது.

சௌரவ் கங்குலியின் உடல்நிலையை மருத்துவர்கள் புதன்கிழமை காலை முழுமையாக பரிசோதித்தனர். அதன் பின்னர் அவர் மருத்துவமனையில் ஒருநாள் ஓய்வெடுத்த பின்னர், நேற்று வீடு திரும்பியுள்ளார். (ற-இ)

# நியூசிலாந்து சாதனை

வெலிங்டன், ஜன.8
பாகிஸ்தான் அணிக்கெதிரான 2 ஆவது டெஸ்டில் பாகிஸ்தானை இன்னிங்ஸ் கணக்கில் வீழ்த்தி ஐ.சி.சி தரவரிசையில் உலகின் முதல்நிலை இடத்தைப் பிடித்து நியூசிலாந்து புதிய சாதனை படைத்துள்ளது.

நியூசிலாந்து- பாகிஸ்தான் அணிகள் மோதும் 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் ஆட்டம் கிறிஸ்ட்சர்ச் மைதானத்தில் நடைபெற்றது. பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 297 ஓட்டங்கள் எடுத்தது. நியூசிலாந்து முதல் இன்னிங்ஸில் 6 இலக்குகள் இழப்புக்கு 659 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது. அணித்தலைவர் வில்லியம்சன் இரட்டை சதமும் (38 ஓட்டங்கள்), ஹென்றி நிக்கோல்ஸ் (157 ஓட்டங்கள்), மிச்சேல் (102 ஓட்டங்கள்) ஆகியோர் சதமும் அடித்தனர். 362 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்ஸை ஆடிய பாகிஸ்தான் நேற்றுமுன்தினம் 3 ஆவது நாள் ஆட்டநேர முடிவில் ஒரு இலக்கு இழப்புக்கு 8 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. நேற்று முன்தினம் 4 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. பாகிஸ்தான் தொடர்ந்து ஆடியது.

நியூசிலாந்து வீரர்களின் அபாரமான பந்து வீச்சால் பாகிஸ்தான் இலக்குகள் சரிந்தன. அந்த அணி 186 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் நியூசிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 176 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அசார் அலி அதிகபட்சமாக தலா 37 ஓட்டங்கள் எடுத்தார். கெய்ல் ஜேமிசன் 48 ஓட்டங்கள் கொடுத்து 6 இலக்குகள் வீழ்த்தினார். போல்ட் 3 இலக்குகளும், வில்லியம்சன் ஒரு இலக்கும் எடுத்தனர்.

இந்த வெற்றி மூலம் நியூசிலாந்து அணி 2:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. முதல் டெஸ்டில் அந்த அணி 101 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இருந்தது. ஏற்கனவே 20 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட தொடரையும் நியூசிலாந்து 2ப:1 என்ற கணக்கில் கைப்பற்றி இருந்தது. பாகிஸ்தான் அணி 2 தொடரை இழந்து ஏமாற்றம் அடைந்தது. இந்த வெற்றி மூலம் நியூசிலாந்து அணி டெஸ்ட் தர வரிசையில் உலகின் முதல்நிலை இடத்தைப் பிடித்தது. இதன்மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதல்முறையாக அந்த அணி முதல் இடத்தைப் பிடித்தது. நியூசிலாந்து அணி 118 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், ஆஸ்திரேலியா 116 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலும், இந்தியா 114 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும் உள்ளன. (ற-இ)

# 170 கிலோ கஞ்சாவுடன் இருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜன.8
காங்கேசன்துறை பருத்தித்துறை கடற்பரப்புக்கு இடையில் 170 கிலோ கிராம் கஞ்சாவுடன் இருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர் என காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், சந்தேகத்துக்கு இடமான படகொன்றைச் சோதனையிட்டுள்ளனர். அந்தப் படகில் இருந்து கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. படகில் இருந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். சந்தேகநபர்கள் இருவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-26)

# மேலும் 532 பேருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, ஜன.8
இலங்கையில் நேற்றும் 532 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இது வரையில் 43 ஆயிரத்து 30 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 46 ஆயிரத்து 780 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றாளர்களில் 39 ஆயிரத்து 661 பேர் குணமடைந்துள்ளனர்.

6 ஆயிரத்து 897 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### அ.மெரிக்காவில்...

னார், அதைக்கட்டுப்படுத்தத்தவறினார்என்றகுற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் ட்ரம்பை பதவியில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ட்ரம்பின் பதவிக்காலம் முடிவடைவதற்கு இன்னும் இரு வாரங்களே உள்ள நிலையில் இந்த நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த நவம்பர் 3ஆம் திகதி நடந்த தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஜோ பைடன் பெற்ற வெற்றியை உறுதி செய்வதற்காக நாடாளுமன்றத்தின் இரு அவைகளினதும் கூட்டு அமர்வு நேற்றுமுன்தினம் நண்பகல் ஆரம்பித்த சிறிது நேரத்தில் அங்கு பெரும் களேபரம் வெடித்தது.

ஆயிரக்கணக்கான ட்ரம்ப் ஆதரவாளர்கள் ஆயுதங்களுடன் காங்கிரஸ் கட்டடத்தை முற்றுகையிட்டு அதன் ஜன்னல்களை உடைத்து உள்ளே நுழைந்து பெரும் அடிதடியில் இறங்கினர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கட்டுப்படுத்தப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் நால்வர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் முக்கிய அடையாளங்களில் ஒன்றான காங்கிரஸ் கட்டடத்தில் நிகழ்ந்த வன்முறைக் கலகங்களுக்கு அதிபர் ட்ரம்ப் தனது ஆதரவாளர்களைத் தூண்டும் விதமாக வெளியிட்ட கருத்துக்களே காரணம் என்று கூறப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் அவரை ஆட்சியில் இருந்து அகற்றும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது. (ம)

### இந்தியாவின்..

மான நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

மாகாண சபைத் தேர்தல் குறித்து எதிர்க்கட்சியினர் குறிப்பிடும் கருத்துக்கள் அவர்களின் குறைகளை மறைத்துக்கொள்ளும் வகையில் உள்ளது. மாகாண சபைத் தேர்தல் பிற்போடப் பட்டுள்ளமைக்கும், அரசுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

மாகாண சபைத் தேர்தல் முறைமையை நீக்கி புதிய தேர்தல் முறைமையை கடந்த அரசு அறிமுகப்படுத்தியது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் அப்போதைய அரசு தோல்வியடைந்ததால் மாகாண சபைத் தேர்தலை நடத்த எவ்வித நடவடிக்கைகளையும் அரசு முன்னெடுக்கவில்லை.

கடந்த அரசு எல்லை நிர்ணய அறிக்கையைக்கொண்டு வந்து அதை மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் வேண்டுமென்றே தோற்கடித்து மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் சிக்கல் நிலையை ஏற்படுத்தித் தேர்தலைக் கால வரையறையின்றி பிற்போட்டுள்ளது.

நல்லாட்சி அரசு தேசிய பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு மாத்திரமல்ல மக்களின் ஜனநாயக உரிமையையும் பலவீனப்படுத்தியுள்ளது. மாகாண சபைத் தேர்தல் குறித்து கருத்துரைக்கும் தார்மீக உரிமை கடந்த அரசின் உறுப்பினர்களுக்குக் கிடையாது. ஐக்கியக் தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் முறையற்ற செயற்பாடுகள் அனைத்துக்கும் மூல காரணமாகும்.

மாகாண சபை முறைமையை நீக்க வேண்டும் என்பது தற்போதைய அரசின் நோக்கமல்ல. தேர்தலைப் பழைய முறையிலும், புதிய முறையிலும் நடத்த முடியாத நெருக்கடி நிலை காணப்படுகின்றது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவது அரசின் பொறுப்பாகும். ஆனால், இந்தியாவின் அவசரத்துக்காக தேர்தலை விரைவாக நடத்த முடியாது. தேர்தல் திருத்த முறைமை குறித்து அரசு உரிய கவனம் செலுத்தியுள்ளது. என்றார். (ஒ-22)

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் கோண்டாவில் இராச வீதிச் சந்தியில் கோண்டாவில் வீதியில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
077 288 0152
077 805 1655
077 505 8561

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் மானிப்பாய் மேற்கு கட்டுடை சந்தியில் இருந்து நவாலி வீதியில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து கொடுக்கப்படும். 2 பரப்பாக. தரகர் தேவையில்லை.
(பரப்பின் விலை 5 லட்சம்)
074 075 4204
077 623 4204

**கார் தேவை**
*Toyota Corolla-141/ Yaris/ Rush/ Daihatsu Terios
*First Owner/ Low Millage
விரும்பத்தக்கது.
தொடர்பு:076 171 1351

**ஹோட்டல் மனேஜ்மன்ட்**
அரசாங்க, சர்வதேச அங்கீகார சான்றிதழ்


பயிற்சிக் காலத்தில் ரூ.1 லட்சம் வரை வருமானம்
100% வேலைவாய்ப்பு
இலவச ஆங்கில வகுப்பு
தமிழ் - ஆங்கில மொழி மூலமான விரிவுரைகள்
ஆரம்பம் 09.01.2021 11.01.2021
+Certificate in Hotel and Resort Management LKR - 30,000 (520 hrs)
+Certificate in International Cookery & Culinary Arts LKR 60,000 (600 hrs)
T.P: 076 057 9999, 021 314 6171
No.1544, K.K.S Road, Jaffna.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.